தரம் 11

# அறபு இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)




சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

Web| www.nie.lk Email| info@nie.lk

# அறபு இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் - 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

அறபு இலக்கியம்

தரம் 10
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு - 2015

©HARAN Graph தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள், விழுமியக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு : அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015 ஆம் ஆண்டில் தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**வளிப்பங்களிப்பு**

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுகவம்

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**கலாநிதி அமீனா காஸிம்**

முதுநிலை விரிவுரையாளர்,

அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை
பேராதெனிய பல்கலைக்கழகம்

**கலாநிதி எம்.எஸ்.எம். ஸலீம்**
முதுநிலை விரிவுரையாளர்,
அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை
பேராதெனிய பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.எச்.எம். ஹனீபா**
முதுநிலை விரிவுரையாளர்,
அரபு இஸ்லாமிய நாகரிகத் துறை
பேராதெனிய பல்கலைக்கழகம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக** **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக** **எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.
**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.
**எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் முஸ்லிம் வித்தியாலயம், நாம்புளுவ.
**வை.எல்.எம்.ஸித்தீக்**
ஆசிரியர்,பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி, வரகாபொலை.
**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றதுது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாகத் தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தை திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காக குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களை பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாக திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே எதிர்பார்ப்பாகும்.

அஷ்ஷெய்க்.ஜே.எம்.ஜெஸார்.
செயற்றிட்டத் தலைவர்

**தரவிருத்தி உள்ளீடுள்**

- டிமை கடதாசி
- பெல்ற் பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் போர்ட்
- ஒலி / ஒளி நாடாக்கள்
- இறுவட்டுக்கள்
- பசை நாடாக்கள்
- இணையத்தளங்கள்

**நூல்கள்**


- இஸ்லாமிய இலக்கியம் - அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். இத்ரீஸ்
- அல்லுகதுல் அறபிய்யா வஅஹ்காமுத் தஜ்வீத் - முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள வெளியீடு
- இலக்கிய கருவூலம் - ஆர். பீ. எம். கனி
- அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் - ஏ.எம்.ஏ. அஸீஸ்
- அல் அதபு வன் நுஸுஊஸ், லிபிய கல்வி அமைச்சின் வெளியீடு

## உள்ளடக்கம்


பக்கம்

- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
- வளப்பங்களிப்பு v
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் vi

அறிமுகம் x
தேசிய இலக்குகள் xi
அடிப்படைத் தேர்ச்சிகள் xiii
பாடத்திட்டம் xvi

கற்றல் கற்பித்தல் முறை xx
பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் xxi
கணிப்பீடும் மதிப்பீடும் xxii

- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் 1-73

## 01. அறிமுகம்

ஓர் இலக்கிய வடிவத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்வதற்கும் அது தொடர்பான பூரணமான அறிவு திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இலக்கிய நயம் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகளாக அங்கீகரிக்கப்பட்ட ஆறு மொழிகளில் ஒன்றாகவும், உலகில் சுமார் 1.6 பில்லியன் மக்களால் பேசப்படுவதும், செழுமை மிக்க மொழியாகவும் காணப்படுகின்ற அறபு மொழியின் இலக்கிய வடிவங்கள் நயம்மிக்கவை.

இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் கண்ணாடியாக இருப்பதால் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களே இலக்கியமாக பரிணமிக்கின்றன. அரபுலகில் பண்டைய காலம் தொட்டு வாய்மொழி இலக்கியங்கள் இருந்தபோதிலும் ஐந்தாம் நூற்றாண்டின் பின்னரே அரபு இலக்கியம் வளரத் தொடங்கியது. குறிப்பாக அரபு இலக்கியத்தின் மிக்சசிறந்த படைப்பாக அல் குர்ஆன் கருதப்படுகின்றது. அல் குர்ஆனின் வருகை சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றத்தைப்போன்றே அரபு இலக்கியத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. முன்னர் இருந்த இழிவான விடயங்கள் நீங்கி உன்னதமான விடயங்கள் இலக்கியத்தில் இடம்பிடித்தன. இவ்வாறான சிறப்புமிக்க அரபு இலக்கிய வடிவங்களை நயப்பதன் ஊடாக மாணவர்களின் உள்ளம், கலை ஆர்வத்தை தூண்டும் வகையில் மாற்றியமைக்கப்படுகின்றது.

தரம் 10 மாணவர்கள், அரபு இலக்கிய நயத்தைக் கற்பதற்கும் க.பொ.த(சா/த) பரீட்சையில் விருப்பத்திற்குரிய ஒரு பாடமாகத் தெரிவு செய்வதற்கும் ஏற்றவகையில் கற்றல் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பொதுத் தகைமைகளுக்கும் அமைவாக அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்க்கும் நோக்குடன் இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தில் உள்ள அல் குர்ஆன் வசனங்கள். ஹதீஸ்கள், உரைநடைப்பகுதிகள், கஸீதாக்கள் என்பன மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை தூண்டும் நோக்கத்துடனும் அவர்களது வயது, விருப்பு, இரசனை என்பவற்றைக் கவனத்திற்கொண்டும் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களின் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சந்தர்ப்ப துஆக்கள், படிப்பினைமிக்க சிறுவர் கதைகள் என்பன காணப்படுகின்றன. அரபுக் கவிதைகளின் பொருள் மற்றும் அணிச்சிறப்புக்கள் மாணவர்களிடையே கற்றல் ஆர்வத்தைத் தூண்டுவதோடு புத்தாக்கத்திறனையும் விருத்தி செய்கின்றன.

அரபு இலக்கிய வடிவங்களை கற்பதனூடாக மாணவர்கள் மொழித் திறன்களையும், மொழி வளத்தையும் விருத்தி செய்து கொள்வதுடன், பல்வேறுபட்ட ஆக்கங்களை படைக்கும் திறனையும் விமர்சிக்கும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 02. கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### தேசிய இலக்குகள்

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக்கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போசிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துதல்

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## 03.அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்திசெய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு தகவல் தொழிநுட்பத்தகைமை

எழுத்தறிவு :கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், ஒழுங்காகவும் எழுதுதல், பயனுள்ளவாறு கருத்துப் பரிமாறுதல்.

எண்ணிக்கை தொடர்பான அறிவு :உபகரணங்கள், வெளி, காலம் எண்ணுதல், எண்ணுவதற்கும அளவிடுவதற்குமான முறையாக இலக்கங்களை உபயோகித்தல்.

வரைபுகளை உபயோகித்தல் :கோடுகள், குறியீடுகளை உபயோகித்துக் கருத்துக்களை வெளிப்படுத்தல், மற்றும் கோடுகள், குறியீடுகள், வர்ணங்களைப் பயன்படுத்தி விளக்குதல், அறிவுறுத்தல் கருத்துக்களை வெளிப்படுத்துதல், அறிக்கையிடல்.

தகவற் தொழிநுட்பத்திறன் :கணனி அறிவுடன் கற்றலின் போதும், தொழில் செய்யும் போதும், பிரத்தியேக வாழ்வின் போதும் தகவற் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உபயோகித்தல்.

### (ii) ஆளுமை விருத்திக்கான தேர்ச்சி

ஆக்கபூர்வமான தன்மை, விரிவான சிந்தனை, தொடங்கும் ஆற்றல், முடிவெடுத்தல், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறிவுச் சிந்தனை, தர்க்கரீதியான சிந்தனை, குழுவுணர்வுடன் செயலாற்றுதல், ஆளிடைத் தொடர்பு, புதியவைகளைக் கண்டறிதல், ஆய்வு செய்தல் போன்றவற்றுடன் வெளிப்படையான எண்ணம், பொறுமை, சகிப்பு மற்றும் மனிதநேயம் போன்ற பண்புகள்.

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சி

இத்தேர்ச்சி சமூக, உயிரியல் மற்றும் பௌதீக சூழலுடன் தொடர்புடையது.

**சமூகச் சூழல்** : தேசிய செல்வங்கள் பற்றிய விளக்கம் பல்லினச் சமூகத்தின் அங்கத்தினராக இருப்பதுடன் இணைந்து வாழ்வதற்கான உணர்வினை கொண்டிருப்பதுடன் உரிய திறன்களையும் பெற்றிருத்தல். சாதாரண கடமைகள் பற்றிய உணர்வு, சமூகத்தொடர்பு, தனிநபர் நடத்தைகள், சாதாரண மற்றும் கட்டுப்பாடுகளுடனான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்பு, கடமைகளும் கட்டுப்பாடும்.

**உயிரியல் சூழல்** : உயிருள்ள உலகம், மக்களும் ஏனைய உயிரினங்களும்,

மரம், செடி, கொடிகள், காடுகள், கடல், நீர், வளி, தாவர - விலங்குகளுக்கும், விலங்குகளுக்கும் மனித வாழ்வுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றிய விளக்கம், உணர்வுகளும் திறன்களும்.

**பௌதீகச் சூழல்** : வெளி, சக்தி, எரிபொருட்கள், திரவியங்கள், பொருட்கள் மற்றும் மனித வாழ்வுடன் தொடர்பு, உணவு, உடை, சுகாதாரம், சக்தி வாய்ப்புக்கள், நித்திரை, அமைதி, ஓய்வு, கழிவுகள், மலசலங்களை அப்புறப்படுத்துவது தொடர்பான விளக்கம், உணர்வும் திறன்களும்.

கற்பதற்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் இதில் அடங்கும்.

**(iv) வேலை உலகுக்குத் தயாராகும் தேர்ச்சி**

பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல், தனது தொழிலாற்றல், சவால்களை விளங்கிக் கொள்ளுதல், தனது ஆற்றலுக்கு ஏற்ற தொழிலொன்றைத் தெரிவு செய்வதுடன், போதியளவு வருமானத்தையும் பெறுதல். தனது ஆற்றல்களை உயரமட்டத்தில் வெளிப்படுத்தவும், அதன் பலாபலன்களை அதிகரிக்கச் செய்ய செயற்படுவதோடு அது தொடர்பான திறன்களை வளர்த்தலும்.

**(v) சமயமும் ஒழுக்க விழுமியங்களும் தொடர்பான தேர்ச்சி**

அன்றாட வாழ்வில் ஒவ்வொருவரும் ஒழுக்கவிழுமியங்கள், பண்பாடுகள் மற்றும் சமய அனுஷ்டானங்களுக்கு ஏற்புடையவாறு நடத்தல் என்பவற்றிற்கு இயைவாகி, மிகப் பொருத்தமானவற்றைத் தெரிந்து அதற்கு ஏற்றவாறு செயற்படுத்தல்.

**(vi) விளையாட்டு மற்றும் ஓய்வைப் பயன்படுத்தும் தேர்ச்சி**

அழகியற் செயற்பாடுகள், இலக்கியம், விளையாடுதல், விளையாட்டுக்களும் மெய்வல்லுனர் விளையாட்டும், விருப்பூட்டும் செயற்பாடுகளுடன் அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளினூடாக வெளிப்படும் ஆக்கபூர்வமான வினோதச் செயல்கள், மகிழ்ச்சி, ஆர்வம் மற்றும் இவ்வாறான மானுட அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்காகக் கற்றல்" தொடர்பான தேர்ச்சி**

துரிதமாக மாறிவருவதும், சிக்கலானதும் ஒருவரோடொருவரில் தங்கியுள்ளதுமான இவ்வுலகில் அம்மாற்றங்களுக்கு ஏற்புடையவாறு நடக்கும் போது, அவற்றினை உணர்வுடனும் அனுகூலமான முறையிலும் எடுத்து மக்களுக்கு சொல்வதும், சுதந்திரமாகக் கற்பதற்கான ஆற்றலை மக்களுக்கு வழங்குவதும்.

# பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0**<br>அறபு இலக்கியத்தின் சிறப்புக்களை நயந்து கூறுவார் | 1.1.<br>இலக்கிய நயம் பற்றிய அறிவைப்பெற்று இலக்கிய ஆக்கங்களை நயந்து கூறுவார். | இலக்கிய நயம் பற்றியஅறிமுகம் | • இலக்கிய நயம் என்றால் என்ன என்பதை விளங்கி எடுத்துக் காட்டுவார்.<br>• இலக்கிய நயத்தில் உள்ளடங்கும் அம்சங்களைப் பட்டியல் படுத்துவார். | 04 |
| | 1.2 அறபு இலக்கிய வரலாற்றை விளங்கி அதன் போக்கை இனங்காண்பார். | அறபு இலக்கிய வரலாறு<br>• உமைய்யா<br>• அப்பாசிய்யா<br>• நவீன காலம் | • அறபு இலக்கியத்தின் வரலாற்றைச் சுருக்கமாக விபரிப்பார்.<br>• அறபு இலக்கியத்தின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார். | 06 |
| **2.0**<br>அல்குர்ஆனையும் அதன் கலைகளையும் நயந்து கூறுவார். | 2.1 அல்குர்ஆனின் தெரிவு செய்யப்பட்ட வசனங்களின் இலக்கியப் பாங்கை அறிந்து கூறுவார். | தெரிவு செய்யப்பட்ட வசனங்களின்<br>• பின்னணி<br>• சொல் விளக்கம்<br>• மொழிபெயர்ப்பு<br>• இலக்கிய நயம் | • அல்குர்ஆனின் இலக்கிய நயம் பொருந்திய வசனங்களைத் தெரிவு செய்வார்.<br>• தெரிவு செய்யப்பட்ட வசனங்களின் கருத்துக்களை அறிவதோடு அவற்றின் நயங்களைத் தனியாகக் குறித்து அவற்றுக்கு விளக்கமளிப்பார்.<br>• தெரிவு செய்யப்படாத இலக்கிய நயம் உள்ள வேறு ஆயத்துக்களைத் தேடி முன்வைப்பார்.<br>• அல்குர்ஆனிய வசனங்களில் காணப்படும் இலக்கியப் போக்கை நயந்து கூறுவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.2 அல்குர்ஆன் அருளப்பட்ட பின்னணியை விளக்குவார். | தெரிவு செய்யப்பட்ட அல்குர்ஆனிய வசனங்கள் | • தெரிவுசெய்யப்பட்ட வசனங்கள் அருளப்பட்டதற்கான காரணங்களை அவை அருளப்பட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புறுத்தி விளக்குவார்.<br>• அவை அருளப்பட்ட சந்தர்ப்பங்களில் காணப்பட்ட இலக்கியங்களோடு ஒப்பிட்டு விளக்குவார்.<br>• அவற்றில் காணப்படும் இலக்கிய நயங்களை எடுத்துக்காட்டுவார். | 05 |
| 3.0 ஹதீஸ்களை இலக்கிய இரசனையோடு நயந்து கூறுவார் | 3.1 ஹதீஸ்களில் உள்ளடங்கியுள்ள இலக்கியப்பாங்கை அறிந்து கூறுவார். | தெரிவு செய்யப்பட்ட ஹதீஸ்களின்<br>• சொல் விளக்கம்<br>• மொழிபெயர்ப்பு<br>• இலக்கிய நயம் | • தெரிவு செய்யப்பட்ட ஹதீஸ்களின் சொல் விளக்கத்தைக் கூறுவார்.<br>• அந்த ஹதீஸ்களின் கருத்தை தனது மொழியில் எடுத்துரைப்பார்.<br>• ஹதீஸ்களில் காணப்படும் இலக்கிய நயங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• அந்த ஹதீஸ்கள் எடுத்துக் கூறும் போதனைகளை தமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவார். | 10 |
| 4.0 தஜ்வீத் கலையையும் அதன் பிரிவுகளையும் நயந்து கூறுவார். | 4.1 அல்குர்ஆனை ஓதுவதற்கான சட்டங்களையும் ஓதும் முறைகளையும் அறிந்து தெரிவு செய்யப்பட்ட வசனங்களை தஜ்வீத் | • சுக்கூன் பெற்ற மீமுடைய சட்டங்கள்<br>• சத்து பெற்று வரக்கூடிய நூன்<br>• “ரா” என்ற எழுத்துடைய சட்டங்கள் | • அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஒழுங்காக ஓதக்கற்றுக் கொள்வார்<br>• தஜ்வீத் சட்டங்களை விளங்கிக் கூறுவார்.<br>• மக்கி மதனி ஆயத்களின் இலக்கிய அம்சங்களை இனம்பிரித்து விளங்கிக் கொள்வார் | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | சட்டங்களை அனுசரித்து ஓதுவார். | • நிறுத்தற் குறியீடுகள்<br>• மக்கி மதனி வசனங்களின் இலக்கிய வேறுபாடுகள் | • அல்குர்ஆன் ஓதுவதில் தஜ்வீத் கலை முக்கியமானது என்பதை ஏனையோருக்கும் எடுத்துக் கூறுவார் | |
| 5.0 அன்றாடம் ஓதிவரும் துஆக்களை அறிந்து அதனை நயந்து கூறுவார். | 5.1 குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஓத வேண்டிய துஆக்களை இனங்கண்டு அவற்றில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளங்கி பிரயோகிப்பார். | • தெரிவு செய்யப்பட்ட துஆக்கள் | • அன்றாடம் ஓத வேண்டிய சந்தர்ப்ப துஆக்களை அறிந்து நயந்து ஓதி வருவார்.<br>• துஆக்களில் காணப்படும் கருத்துச் செறிவினை எடுத்துக் கூறுவார்.<br>• அவற்றில் காணப்படும் இலக்கிய நயங்களை கண்டறிந்து கூறுவார். | 09 |
| 6.0 அறபுக் கவிதைகளை வாசித்து இலக்கிய நயங்களை வெளிப்படுத்திக் காட்டுவார். | 6.1 தெரிவுசெய்யப்பட்ட கவிதைகளை விளங்கி அக்கவிதைகளில் காணப்படும் நயங்களைக் கண்டறிந்து எடுத்துக் காட்டுவார். | • தெரிவு செய்யப்பட்ட கவிதைகள் | • கவிதைகளை இரசனை உணர்வோடு வாசிப்பார்.<br>• கவிதைகளில் இடம்பெறும் விழுமியப் பண்புகளையும் இலக்கிய நயங்களையும் எடுத்துக் காட்டுவார்.<br>• கவிதையின் மையக் கருத்தை நயப்பார்.<br>• மொழி சார் அணிகளை கண்டறிந்து கூறுவார்.<br>• கவிதைகளைத் திரட்டி தொகுத்து காட்சிப்படுத்துவார். | 08 |
| 7.0 அறபுக் கதைகளை வாசித்து, எழுதி, சுவைத்து வெளிப்படுத்துவார். | 7.1 அறபுக்கதைகளைத் திரட்டியும் வாசித்தும் நயங்கண்டு கூறுவார். | • தெரிவு செய்யப்பட்ட கதைகள் | • கதையின் மையக் கருத்தை வெளிப்படுத்துவார்.<br>• கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் விழுமியங்களை எடுத்தக் காட்டுவார். | 09 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | • சிறிய கதைகளை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.<br>• கதைகளில் காணப்படும் இலக்கிய நயத்தை தமது கதைகளில் இணைக்கும் ஆற்றலைப் பெறுவார். | |
| 8.0 அறபுப் பழமொழிகளை கண்டறிந்து அவற்றின் பின்னணியையும் இலக்கிய சுவையையும் எடுத்துக் கூறுவார். | 8.1 அறபுப் பழமொழிகளைத் தேடிப் பெற்று அவற்றின் இலக்கிய நயங்களை கண்டறிந்து கூறுவார். | • தெரிவு செய்யப்பட்ட பழமொழிகள் | • பழமொழிகளை நயந்து விளக்குவார்.<br>• பழமொழிகளில் காணப்படும் இலக்கிய நயத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• பழமொழிகளை சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தும் திறனைப் பெறுவார்.<br>• பழமொழிகளைத் திரட்டி அவற்றுக்குப் பொருத்தமான கதைகளை, நிகழ்வுகளை எழுதிக் காட்டுவார். | 10 |
| 9.0 அறபுத் தமிழ் இலக்கியம் பற்றி விளங்கி ஏனையவர்களுக்கும் எடுத்துக் கூறுவார். | 9.1 அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களை இனங்கண்டு அவற்றின் வடிவங்களை ஏனைய மொழி இலக்கிய வடிவங்களோடு ஒப்புநோக்கி விளக்குவார். | • மீஸான் மாலை<br>• தலைப்பாத்திஹா<br>• குத்பாத் - இப்னு நபாதா | • அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களை எடுத்துக் காட்டி விளக்கமளிப்பார்.<br>• அறபு நூல்களைப் போன்றே அறபுத் தமிழ் நூல்களையும் வாசித்து வருவார்.<br>• அறபுத் தமிழ் மொழிப்பயன்பாட்டின் வீழ்ச்சிக்கான காரணங்களையும், மீளுயிர்ப்புக்கான வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுவார். | 05 |

## 04. கற்றல்- கற்பித்தல் முறை

எமது கலைத்திட்டத்தில் அறபு மொழி இலக்கிய நயம் ஒரு பாடமாக இணைக்கப்பட்டுள்ளது. அதனை விருப்பத்துக்குரிய ஒரு பாடமாக கற்பதற்கு கவர்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் முறையொன்றைக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நாட்டில் பெருவழக்காக இல்லாத அறபு மொழியின் இலக்கிய நயத்தைக் கற்பிப்பதற்கு பொருத்தமான ஒரு செயலொழுங்கை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அறபு உரை நடை இலக்கிய படைப்புகளையும், செய்யுள் இலக்கிய படைப்புகளையும் கற்பதோடு அவற்றின் நோக்கங்கள், மொழியாளுகை, சொற் பொருத்தம், உரையொழுங்கு, இலக்கியச் சுவை, கையாளப்பட்டுள்ள உத்திகள் போன்றவற்றின் சிறப்புக்களை இனங்கண்டு, தமது மொழிப் பிரயோகத்தில் அவற்றை எடுத்தாள்வதிலும், சிறுபடைப்புக்களை தாமாகவே உருவாக்குவதிலும் மாணவரை வழிநடத்த வேண்டிய தேவை உண்டு. இதற்காக மாணவர்களை வழிநடத்துவதற்கு ஆசிரியரின் தொழிற்பாடு முதன்மை பெறுகின்றது.

இலக்கிய வடிவங்களான கதை, கவிதை, நாடகம், உரையாடல், உரைச்சித்திரம், பழமொழிகள் போன்றவற்றில் இடம்பெறும் கற்பனைத் திறன், ஆக்கத்திறன், சமூக திறன் போன்றவற்றோடு கையாளப்பட்டுள்ள உவமான உவமேயங்கள், பல்வேறு அணிகள், ஒத்திசைவுகள் போன்றவற்றை இனங்கண்டு சுவைப்பதற்கும், அவற்றை சுய ஆக்கங்களில் பிரயோகிப்பதற்கும் ஆசிரியர் வழிகாட்டல் வேண்டும்.

புதிய கல்வித்திட்ட ஒழுங்கமைப்பில் கற்பித்தல் செயலொழுங்கு மாணவரை மையமாகக் கொண்ட செயலொழுங்காக அமைதல் வற்புறுத்தப்படுவதால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவரின் இலக்கிய ஈடுபாடு வெளிப்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். உரைநடை, செய்யுள் இலக்கிய பகுதிகளிலிருந்து பொருத்தமான உதாரணங்களைத் தேர்ந்தெடுக்கவும் அதற்கான காரணங்களை முன்வைக்கவும், தாம் சுவைத்த முறையை வெளிப்படுத்தவும் மாணவர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இதற்கான வழிகாட்டல்களையும், செயல்முறைகளையும் ஏற்கனவே திட்டமிட்டுக் கொள்வது பயனுடையதாகும்.

இங்கு சில கற்றல் கற்பித்தல் முறைகள் காண்பிக்கப்படுகின்றன.

- கலந்துரையாடல்
- பங்கேற்றுக் கற்றல்
- சிந்தனைக் கிளர்வு
- தகவல் திரட்டல்
- விவாதம்
- கதை கூறல்
- குழுச் செயற்பாடு
- தேடியாய்தல்
- ஒப்படை

இதற்கு மேலதிகமாக பாடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் பொருத்தமான மாணவர் மையச் சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கதாகும்.

அறபு இலக்கிய நயத்தை அறியும் திறனை மேம்படுத்த உதவும் வகையில் இலக்கிய நயம் நிறைந்த சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள், இலக்கிய கட்டுரைகள், தொகுப்புக்கள் போன்றவற்றை தேடவும், கற்கவும், நயக்கவும் கூடியதாக வாய்ப்புக்களும் வளங்களும் கொடுக்கப்பட வேண்டும்.

எனவே அறபு இலக்கியத்தை ஆர்வத்தோடு கற்கவும், படைப்புக்களின் நயங்களை இனங்காணவும், படித்து சுவைக்கவும் பொருத்தமான வழிமுறைகளைக் கொண்டு விளைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் முறைகளை செயற்படுத்துவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 05. பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளரச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இலக்கியம் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். ஓர் இலக்கியவாதி தான் கண்ட, அனுபவித்த நிகழ்வை இலக்கிய வடிவில் உணர்வு பூர்வமாக எடுத்துக்காட்டுவார். அதனை வாசிப்பவர் இலக்கியவாதி உணர்ந்தவாறோ, தாம் உணர்ந்தவாறோ நயப்பார். இது ஒவ்வொருவரின் தனியாள் வேறுபாட்டுக்கேற்ப வேறுபடலாம். இச்சந்தர்ப்பத்தில் மாணவரை உற்சாகமூட்டல், பாராட்டல், தட்டிக் கொடுத்தல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு இலக்கிய நயத்தை சுயமாக வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்த்து விட வேண்டும். இதற்காகப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

- பொருத்தமான இலக்கிய ஆக்கங்களை சேகரித்தல்
- மாணவரிடையே இலக்கிய நயம் தொடர்பான போட்டிகளை நடத்தல்
- சிறந்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்
- பிரதேச வளவாளர்கள் மூலம் மேலதிக அறிவையும், திறனையும் பெறச் செய்தல்
- இலக்கிய தினங்களைக் கொண்டாடுதல்
- பிறமொழியிலான இலக்கிய நயங்களோடு அறபுமொழி இலக்கிய நயங்களை ஒப்பிட்டுக் காட்டும் நிகழ்வுகளை நடத்தல்
- பிறமொழி இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்றல்
- இலக்கிய மன்றமொன்றை அமைத்தல்

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற் கொள்வதற்குத் தேவையான பௌதிக மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேற்குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்யலாம், அதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் விளைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

அறபு இலக்கிய நயத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளைக் கருத்திற் கொண்டு குறித்த காலத்துக்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாடஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். பாட ஆசிரியர்கள் போதியளவு தகைமையுடையவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும்.

இப்பாடத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலக்கிய பரீச்சயமும், நற்பண்புகளும், அழகுணர்வும் கொண்ட நாட்டுக்குப் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி பெறலாம்.

## 06. கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றன. இது ஒவ்வொரு பாடவேளையிலும் இடம் பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

அறபு இலக்கிய நயம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், இலக்கியங்களைத் தேடிக் கற்றல். இலக்கிய படைப்புக்களை(சிறுவர் பாடல்கள், கவிதை, கட்டுரைகள், உரையாடல், சிறுவர் கதை) உருவாக்கல், இலக்கிய நயம் காணும் முயற்சி போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறை சார்ந்த, முறை சாரா வகை மூலம் கண்டறிய முடியும்.

பாட ஆரம்பம் முதற் கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக்கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக்கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு அறபு இலக்கிய நயம் தொடர்பான மதிப்பீடு கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும், மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத்திட்டங்களுக்கூடாகவோ இடம் பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகளையும், வழிமுறைகளையும் நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, பாடல்கள், கதைகள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள், துணுக்குகள், பழமொழிகள் முதலானவற்றை நலனாயும் முறை, திறன், சுய ஆக்கங்களில் கையாளும் திறன் முதலியனவும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் கணிப்பீடும், மதிப்பீடும் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவை தவிர, பாடல்கள், கதைகள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள் நுணுக்குகள், பழமொழிகள் முதலியவற்றை நலனாயும் முறையில் திறன், சுய ஆக்கங்களில் கையாளும் திறன் முதலியனவும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் கணிப்பீடும், மதிப்பீடும் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் முக்கியமானவை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலக்கிய நயம் ஆளுக்காள் வித்தியாசப்படலாம். ஒவ்வொருவரதும் தனித்துவம், சூழல், ஈடுபாடு, சுவை போன்றவற்றைப் பொறுத்து வேறுபட்ட விடைகள் இடம்பெற முடியும். ஆதலால் பொதுவான கணிப்பீட்டு முறையொன்றிருப்பதே பொருத்தமானதாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும், மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : அறபு இலக்கியத்தின் சிறப்புக்களை நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : இலக்கிய நயம் பற்றிய அறிவைப் பெற்று இலக்கிய ஆக்கங்களை நயந்து எடுத்துக்கூறுவார்.**

**பாடவேளை : 4**

**கற்றல் பேறுகள்:**

- இலக்கிய நயம் என்றால் என்ன என்பதை விளங்கி எடுத்துக்காட்டுவார்.
- இலக்கிய நயத்தில் உள்ளடங்கும் அம்சங்களைப் பட்டியல் படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • பின்வரும் தமிழ் கவிதையை வாசித்துக் காட்டி கருத்துப் பரிமாறுங்கள்.

காற்றுச் சுழன்று அடிக்கிறதே
கனத்த மழையும் சொரிகிறதே
நேற்றுத் தொடங்கி இடிமின்னல்
நிற்கவில்லை பாரம்மா
ஆறு பெருகி ஓடுதம்மா
அயலில் மரங்கள் முறியுதம்மா
சேறு ஆகி விட்ட நிலம்
சென்றால் வழுக்கி விழுமம்மா
வானத்திலிருந்து மழை கோடு
வரைந்தான் போல் வருகிறதே
ஏனோ வீதி மரஞ்செடிகள்
எதுவும் கண்ணில் தெரிவதில்லை

- இக்கவிதை
  - எளிய சொற்களைக் கொண்டுள்ளது.
  - குழந்தை தாயை நோக்கிச் சொல்லும் பாணியில் உள்ளது
  - மழைக்காட்சியை முன்வைக்கின்றது.
  - உவமை, உருவகங்களைக் கையாள்கிறது.
  - கற்பனை அழகை எடுத்துக்காட்டுகிறது.
  - மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுகிறது.

இவை கவிதையை சுவைக்க வைக்கின்ற நயங்களாக உள்ளன.

- பின்வரும் அறபுக் கவிதையை வாசித்து விளங்கி நயம் காண வழிப்படுத்துங்கள்.

01 وَالنَّفْسُ كَالطِّفْلِ إِنْ تُهْمِلْهُ شَبَّ عَلَى حُبِّ الرَّضَاعِ وَإِنْ تَفْطِمْهُ يَنْفَطِمِ

02 كَالزَّهْرِ فِي تَرَفٍ وَالْبَدْرِ فِي شَرَفٍ وَالْبَحْرِ فِي كَرَمٍ وَالدَّهْرِ فِي هِمَمِ

**(قصيدة البردة)**

- இலக்கியம் அழகியல் கலைகளில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. அவ்வுணர்வு வாசகரின் உள்ளத்தை தட்டியெழுப்புகிறது. அவனை அதன்பால் ஈர்க்கின்றது. இவ்வீர்ப்பு நிலையே இலக்கியத்தை நயக்க வைக்கின்றது. எனவேதான் அழகியலுணர்வை தட்டியெழுப்பி இரசனையை ஊட்டக்கூடிய எந்த ஆக்கத்தையும் இலக்கியம் எனக் கூறலாம் என்பர்.
- இலக்கிய நயத்தில் ஆக்கத்திறன், புதுமை, அழகு, கையாளும் அணிகள், சொற்களின் பொருத்தப்பாடு, கற்பனைத் திறன், சிந்தனைக் கிளறல், ஒத்திசை போன்றன செல்வாக்குச் செலுத்துகின்றன.

பின்வரும் கவிதையில் இப்பண்புகளைக் காண வழிப்படுத்துங்கள்.

தேனீ, தேனீ இங்கே வா
ரிங், ரிங் ரிங்ரிங் ரீங் என்று
கூனி இருந்து மலரிடத்தில்
குசு குசுக்கும் சேதி என்ன
விடியும் முன்னே வந்திடுவாய்
வேறு வேலை உனக்கிலையோ
செடியைச் சுற்றிப் பார்த்துவிட்டு
சிரிக்கும் மலரை அணுகுவதேன்.
மலர் வைத்திருக்கும் தேனை எல்லாம்
வாயிலிருக்கும் குழாய் கொண்டு
இலகு வாக உறுஞ்சுகிறாய்
இரக்கம் சிறிதும் உனக்கிலையோ

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

- **பொருத்தமான அறபுக்கவிதைகளை (இணைப்பில் உள்ளவை உட்பட) எடுத்துக்காட்டி நயம் காண வழிப்படுத்துங்கள்.**

**இணைப்பு : 1:1:1**

## مسلمون

مسلمون مسلمون مسلمون
حيث كان الحق والعدل نكون
نرتضي الموت ونأبى ان نهون
في سبيل الله ما أحلى المنون

## قل إسمها

| | |
|---|---|
| محبوبة مدورة | منفوخة مكورة |
| ثيابها من جلد | لا تشتكي من برد |
| في جوفها هواء | وليس فيه ماء |
| نضربها فتهرب | لكنها لا تغضب |
| تساب في الميدان | في أرجل الفتيان |
| وتنثني كالسمكة | فترتمي في الشبكة |
| اسرع وقل لي إسمها | ان كنت قد عرفتها |

## هري

| | |
|---|---|
| هرّي هرّي | حسن الشعر |
| وله وجه | مثل التمر |
| وله عينٌ | مثل النّسر |
| يمشي حولي | حاني الظهر |
| فاداعبه | فوق الحجر |
| وعلى كتفي | وعلى صدري |
| فاذا لاقى | فأرًا يجري |
| يعدو حالا | خلف الفأر |

## رضـــاء الوالـــدين

| | |
|---|---|
| مـــا رضـــــاءُ الله الأ | برضـــــاءِ الوالـــــدين |
| مــا بقــاء الكـــون الأ | بحنـــــان الأبــــوين |
| كـل مـن يغضب امّـا | او ابًـــا يغضــــب ربَّـــهُ |
| فابــذلوا الــروح فــداهم | تجـدوا الخــير جــزاءً |

## مكـارم الاخـلاق

| | |
|---|---|
| شــر المقــال الكــذب | خـــير الخصـــال الأدب |
| البخــل عيــب فاضـــح | والجــود ســتر صـــالح |
| العقــل قاضِــى عــادل | والعجـــب داءٌ قاتـــل |
| العمــر ضــيف راحــل | والمــال ظـل زائـل |
| الـــبر للحـــب ســبب | ان البخيـــــل لا يُحَـــــبُّ |
| طهـارة الأخـلاق | من كرم الاعراق |
| الكــذب والنميمـــة | والغــدر شــرٌّ شـــيمة |
| تـــأنَّ فــى الأمـــور | لا ســـيِّما الشـــرور |
| واعجـل الــى الخـيرات | مـن حـذر الفـوات |
| مالــك غـــير نفســك | لاتــك عنهــا ممســكًا |

**தேர்ச்சி 1.0 : அறபு இலக்கியத்தின் சிறப்புக்களை நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : அறபு இலக்கிய வரலாற்றை விளங்கி அதன் போக்கை இனங்காண்பார்.**

**பாடவேளை : 06**

**கற்றல் பேறுகள்:**

- அறபு இலக்கியத்தின் வரலாற்றை சுருக்கமாக விபரிப்பார்.
- அறபு இலக்கியத்தின் சிறப்புக்களை இனங்கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- அறபு இலக்கியத்தின் வரலாறு ஜாஹிலிய்யாக் காலம் முதல் ஆரம்பிக்கின்றது.
- நபி (ஸல்) அவர்களதும், ஸஹாபாக்களதும் காலப்பிரிவில் ஜாஹிலிய்யாக் கால இலக்கியப் பண்புகள் மாற்றம் பெற்றன.
- வஹியின் வெளிப்பாடு அறபு இலக்கிய வரலாற்றின் திருப்புமுனையாய் அமைந்தது.
- உமையாக்களின் காலத்தில் (ஹி-61-132) ஜாஹிலிய்யாக் கால இலக்கியப் பண்புகள் மீளுயிர்ப்பு பெற்றன.
- இக்காலத்தில்
  - அறபிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
  - அறபு தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
  - ஜாஹிலிய்யாக் கால இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன.
  - அறபியல்லாதவர்களும் அறபு மொழியைக் கற்க ஆரம்பித்ததால் அறபு இலக்கணம் வகுக்கப்பட்டது.
  - கூபா, பஸரா நகர இலக்கணவாதிகளிடையே வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.
  - பைதுல் ஹிக்மாவின் உருவாக்கம் அறபு இலக்கியத்திற்கான பிரதான வாயிலாக காணப்பட்டது.
  - அகராதிகள் தோன்றின.
  - அக்தல்(92) பரஸ்தக்(110) ஜலீல் பின் அதிய்யா (115) உமர் இப்னு ரபீஆ (100) முதலிய கவிஞர்கள் காணப்பட்டனர்.
- அப்பாஸியர் காலத்தில் பிறமொழித்தாக்கங்கள் ஏற்பட்டன.
- முதீ பின் இயாழ், அப்பாஸ் பின் அஹ்னஸ் (191) அபூநுவாஸ், பஷர் பின் புர்தி (167) இஸ்மாயில் அபூ அதாஹிய்யா (213), அபூ தய்யிப்

அல் முதனப்பி (345) அபுல் அ.ஃலா முஅர்ரி (449) அபுல் புஸ்தி (401) இஸ்மாயில் துக்ரால் (514) முதலிய கவிஞர்கள் வாழ்ந்தனர்.

- சமகாலத்தில் ஸ்பானியாவிலும் அறபு இலக்கியம் செழித்தோங்கியது.
- கலீல் பின் அஹ்மத் (170)-(கிதாபுல் ஐன்), அவரது மாணவன் ஷீபவைஹி (அல் கிதாப் ஷீபவைகி) அபூபக்கர் முஹம்மத் பின் துரைத் (ஜம்ஹரா பில் லுகா, கிதாபுல் இஸ்திராக்)(அகராதி) முதலிய நூல்களை இவர்கள் எழுதினர்.
- இப்னு ஷரீக் (468) உம்தா என்ற நூலின் மூலம் சொற்களுக்கு முதன்மை வழங்கும் நிலையிலிருந்து சொல்லையும், பொருளையும் சமநிலைப்படுத்த முயன்றார்.
- இப்னு ஸஅத் (296) அணியியல் பற்றி நூல் எழுதினார்.
- அயலவர்களால் செறிவூட்டப்படும் நூல்கள் முதன்மை பெற்றன.
- ஹுதாமா பின் க.ஃபர் (337) எழுதிய நக்ஸுஷ் ஷிஅர் அப்பாஸிய இலக்கியத்தின் மூல ஆவணமாகக் கொள்ளப்பட்டது. அவரே அகவயமான இலக்கியத்தை புறவய அறிவு சார்ந்த நிலைக்கு கொண்டு வந்தார்.
- அறிவியலின் ஆதிக்கத்திலிருந்து இலக்கியத்தை விடுவித்தனர்.
- ஜுர்ஜானி (472) தலாயிதுல் இ.ஃஜாஸ், அஸ்ராருல் பலாகா முதலான ஒப்பற்ற நூல்களை வழங்கினார்.

நவீன கால அறபு இலக்கியம்

- அறபு நாடுகள் காலனித்துவ ஆதிக்கத்துக்குட்பட்டதனால் அறபு இலக்கியம் தேக்க நிலையை அடைந்தது.
- அறபிகள் நவீன கல்வி முறையை பின்தொடர்ந்தனர்.
- சுதந்திர போராட்டத்திற்காக இலக்கியம் பயன்படுத்தப்பட்டது.
- ஸஈத் பாஷா ஸக்லூல் (எகிப்து) முஹம்மத் அலி பின் இப்றாஹீம் (சிரியா) பாடசாலைகள் நிறுவினர்.
- பாடநூல்கள் அறபியில் எழுதப்பட்டன.
- அச்சுக் கூடங்கள் (கெய்ரோ, கொன்ஸ்தான்து நோபில்) நிறுவப்பட்டதால் பழைய நூல்கள் அச்சிடப்பட்டதோடு புதிய நூல்களும் வெளியிடப்பட்டன.
- பத்திரிகைகள் தோன்றி இலக்கியங்களை (கவிதை, நாவல், நாடகம்) வெளியிட்டன.
- ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மத் அப்துஹு முதலானோரின் சிந்தனைகள் பொதுமைப்படுத்தப்பட்டன.
- எகிப்தைத் தொடர்ந்து சிரியா, இராக், சூடான், குவைத், ஓமன், பலஸ்தீன், துருக்கி முதலான நாடுகளில் சுதந்திர உணர்வும் இலக்கிய வளர்ச்சியும் ஏற்பட்டன.

- இலக்கியத்தை இலக்கிய கண்ணோட்டத்தோடு நோக்குதல், (தாஹா ஹுஸைன்) இலக்கியத்தை இஸ்லாமிய கண்ணோட்டத்தோடு நோக்குதல் (மஹ்மூத் அக்காத்) என்ற ஈரணிகள் தோன்றி வளர்ந்தன.
- மேற்கத்திய சிந்தனையிலிருந்து விடுபடுதல், பலஸ்தீன விடுதலை, மக்களாட்சியின் பால் நகர்த்தல், இஸ்லாத்தின் புத்துயிர்ப்பு போன்ற தலைப்புக்களில் கதைகள், கவிதைகள், நாவல்கள், நாடகங்கள் வளர்ச்சி பெற ஆரம்பித்தன.
- பழைய ரஸாஇல்களுக்குப் பதிலாக இஸ்லாமிய பண்பாட்டுப் பின்புலத்தில் கட்டுரைகள் வெளியாகின. நஜீப் அல் கைலானி, ஸையித் குதுப், அபுல் ஹஸன் அலி நத்வி, பஹாவுத்தீன் அபீரி முதலானோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 2.0 : அல்குர்ஆனையும் அதன் கலைகளையும் நயந்து கூறுவார்**

**தேர்ச்சி மட்டம் 2.1 : அல்குர்ஆனின் தெரிவு செய்யப்பட்ட வசனங்களின் இலக்கியப்பாங்கை அறிந்து கூறுவார்**

**2.2 : அல்குர்ஆன் அருளப்பட்ட பின்னணியை விளக்குவார்.**

**பாடவேளை : 17**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆனின் இலக்கிய நயம் பொருந்திய வசனங்களைத் தெரிவு செய்வார்
- தெரிவு செய்யப்பட்ட வசனங்களின் கருத்துக்களை அறிவதோடு அவற்றின் நயங்களை தனியாகக் குறித்து அவற்றுக்கு விளக்கமளிப்பார்.
- தெரிவு செய்யப்படாத இலக்கிய நயமுள்ள வேறு ஆயத்துக்களை தேடி முன்வைப்பார்.
- அல்குர்ஆனிய வசனங்களில் காணப்படும் இலக்கியப் போக்கை நயந்து கூறுவார்.
- தெரிவுசெய்யப்பட்ட வசனங்கள் அருளப்பட்டதற்கான காரணங்களை அவை அருளப்பட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புறுத்தி விளக்குவார்.
- அவை அருளப்பட்ட சந்தர்ப்பங்களில் காணப்பட்ட இலக்கியங்களோடு ஒப்பிட்டு விளக்குவார்.
- அவற்றில் காணப்படும் இலக்கிய நயங்களை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • **ஸூரா அபஸ (01)**

  - மேற்படி அத்தியாயத்தின் 1 – 10வரையான வசனங்களை ஒரு மாணவனைக் கொண்டு ஓத வையுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இவ்வத்தியாயம் மக்காவில் அருளப்பட்டது
  - இதன் ஆரம்பப் பகுதி நபியவர்களைக் கண்டிப்பதாக அமைந்துள்ளது
  - இதன் சொற்பிரயோகங்களும் வாக்கியங்களின் அமைப்பும் உள்ளத்தில் தாக்கம் செலுத்தும் விதமாய் அமைந்துள்ளது.
  - மனிதர்கள் அனைவரும் ஒரே சமமானவர்கள் என்பது முதல் 10 வசனங்களும் தரும் படிப்பினையாகும்.
  - இதன் வாக்கியங்கள் இரண்டு, மூன்று சொற்களைக் கொண்டமைந்த ஓசை நயம் மிக்கதுமான வசனங்களைக் கொண்டமைந்துள்ளன.
- குறித்த வசனங்களில் காணப்படும் அறபுப் பதங்களை குறித்துக் காட்டி விளக்கமளியுங்கள்

- அல்லாஹ் எல்லா மக்களுக்கும் இறைத்தூதை எத்திவைக்க வேண்டும் என்பதற்காகவே அல்குர்ஆனை நபியவர்கள் மீது அருளினான். நபியவர்கள் தன் பிரச்சாரத்தை ஆரம்பித்த போது அபூஜஹ்ல் போன்ற செல்வாக்கு மிக்கோர் அவர்களை கடுமையாக எதிர்த்தனர். என்றாலும் இத்தகையோர் இஸ்லாத்தை ஏற்பதன் மூலம் சாதாரண பொது மக்கள் இஸ்லாத்தில் நுழைவதற்கு அதிக வாய்ப்புண்டு எனக்கருதிய நபியவர்கள் இஸ்லாத்தைச் சொல்வதில் இத்தகையோருக்கு முன்னுரிமையளித்தார்கள். அவ்வாறான ஒரு சூழலில் தான் உம்மி மக்தூம்(ரழி) என்ற குருடர் இஸ்லாத்தைக் கற்பதற்காக நபியவர்களிடம் வந்தார். இவரது வருகையை இடைஞ்சலாகக் கருதிய நபியவர்கள் அவரைப் புறக்கணித்தார்கள். அல்லாஹ் நபியவர்களின் இச்செயலைக் கண்டிப்பதற்காகவே இவ்வசனங்களை இறக்கினான்.
- சமூக மட்டத்தில் சாதாரண மக்களை இரண்டாம் தரத்தில் வைத்து நோக்குவது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாயினும் அது இஸ்லாம் போதிக்கும் சமத்துவத்திற்கு முற்றிலும் முரணானது.
- இவ்வசனங்களில் உள்ள சொற்களும், அவற்றின் பிரயோகமும் அல்லாஹ்வின் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்துகின்றன.
- அதிக தாக்கத்தை உண்டுபண்ணும் சொற்பிரயோகங்களும் சிறிய வாக்கிய அமைப்பும் மக்கி வசனங்களின் இலக்கியச் சிறப்பாகும்.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**அரும்பதங்கள்**

| | |
|---|---|
| கடுகடுத்தார் | عبس |
| புற முதுகு காட்டினார் | تولى |
| நீங்கள் அறிவீர்களா? | وما يدريك؟ |
| தூய்மை பெறுகிறார் | يزكى |
| தேவைற்றிருந்தான் | استغنى |
| புறக்கணித்தார் | تلهى |
| விரைந்து வருகிறார் | يسعى |
| கவனம் செலுத்தினார் | تصدى |

: - **ஸூரா முத்தஸ்ஸிர் (02)**
    - மேற்படி அத்தியாயத்தின் 1 – 10வரையான வசனங்களை ஒரு மாணவனைக் கொண்டு ஓத வையுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - இவ்வத்தியாயம் மக்காவில் அருளப்பட்டது

- இதன் ஆரம்பப் பகுதி நபியவர்களையே விளித்துப் பேசுகிறது
- இதன் சொற்பிரயோகங்களும் வாக்கியங்களின் அமைப்பும் உள்ளத்தைத் தட்டி எழுப்பும் விதமாய் அமைந்துள்ளன.
- உறுதியான ஈமான், உடல் உளத் தூய்மை, பொறுமை, உற்சாகம் ஆகியன ஓர் அழைப்பாளனின் பண்பாக அமைய வேண்டும் என்பது இவ்வசனங்கள் தரும் படிப்பினையாகும்.

- ஹிராக்குகையில் நபியவர்களிடம் ஜிப்ரீல் (அலை) வந்து முதல் வஹியை அறிவித்துச் சென்றதன் பின் சில நாட்களில் மீண்டும் அவரைக் கண்டார்கள். அதைப்பற்றி நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ‘‘நான் ஒரு நாள் வழியில் நடந்து சென்று கொண்டிருந்தேன். திடீரென வானத்தில் இருந்து ஒரு குரலைக் கேட்டேன். தலையை நிமிர்த்திப் பார்த்தபோது ஹிராக் குகையில் என்னிடம் வந்த அதே வானவர் வானத்திற்கும் பூமிக்குமிடையே ஓர் இருக்கையில் அமர்ந்திருப்பதைக் கண்டு மிகவும் திடுக்கிட்டுப் போனேன். வீட்டுக்குச் சென்று என்னைப் போர்த்துங்கள்; என்னைப் போர்த்துங்கள் என்றேன். வீட்டார் என்மீது ஒரு கம்பளிப்போர்வையைப் போர்த்தினார்கள். அப்போது அல்லாஹ் ‘‘யாஅய்யுஹல் முத்தஸ்ஸிர்’’ என்ற இந்த வசனத்தை வஹி மூலம் அறிவித்தான். பிறகு தொடர்ந்து வஹி இறங்கலாயிற்று’’.
- 1-7 வரையான வசனங்கள் நபியவர்களை விழித்துப் பேச 8-10 வரையான வசனங்கள் மறுமையின் ஆரம்பம் எப்படி என்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
- இவ்வசனங்களில் உள்ள சொற்களும், இலக்கிய நயம் பொருந்திய அவற்றின் பிரயோகமும் உள்ளத்தைத் தட்டியெழுப்பும் விதமாய் அமைந்துள்ளன.
- ஒவ்வொரு வசனத்தின் முடிவும் ‘‘ரா’’ இல் முடிவடைவது அழகிய ஓசை நயத்தைப் பெற்றுக் கொடுக்கிறது.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**அரும்பதங்கள்**

| | |
|---|---|
| போர்த்திக் கொண்டவர் | المــدثر |
| எழுந்து நில்லுங்கள் | قـم |
| எச்சரிக்கை செய்தான் | أنـذر |
| பெருமைப்படுத்துங்கள் | كبِّــــر |
| அசுத்தம் | الـرجز |
| வெருத்துவிடுங்கள் | اهجر |
| நன்றி எதிர்பார்க்காதீர்கள் | لا تمنـــــنى |

| | |
|---|---|
| அதிகமாக | تســــتكثر |
| ஊதப்பட்டால் | اذا نقــرَ |
| எக்காளம் | النـــاقور |
| கஷ்டமான நாள் | يــوم عســير |
| எளிதன்று | غــير يســير |

: • **ஸூரா அல் மஆரிஜ் (03)**

- மேற்படி அத்தியாயத்தின் 1 – 10 வரையான வசனங்களை ஒரு மாணவனைக் கொண்டு ஓத வையுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இவ்வத்தியாயம் மக்காவில் அருளப்பட்டது
  - மறுமை தொடர்பில் சந்தேகம் எழுப்புவோருக்கு பதில் கூறும் விதமாக இவ்வத்தியாயம் ஆரம்பிக்கின்றது
  - இதன் சொற்பிரயோகங்களும் வாக்கியங்களின் அமைப்பும் மறுமையை மறுப்போரின் அடிப்படையற்ற வாதத்தைப் பரிகசிப்பதுடன் விசுவாசிகளின் உள்ளத்தில் நம்பிக்கையை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளது.
  - அல்லாஹ்விடத்தில் ஒரு நாள் புவியின் ஐம்பதாயிரம் வருடங்களுக்குச் சமமானது என்பதால் அவனது பார்வையில் மறுமை மிகக்கிட்டிய ஒரு நிகழ்வாகும். ஆகவே மு.ஃமின்களும் மறுமையை அண்மையில் எதிர்பார்த்து நன்மைகளைச் செய்து கொள்ள வேண்டும் என்பது இவ்வசனங்கள் தரும் படிப்பினையாகும்.
  - குறித்த வசனங்களில் காணப்படும் அறபுப் பதங்களை குறித்துக் காட்டி விளக்கமளியுங்கள்

- நபியவர்களின் மக்காக் காலத்தில் ஈமான் சார்ந்த விடயங்களே அதிகம் அழுத்திச் சொல்லப்பட்டன. இவ்வகையில் நபியவர்கள் மறுமை பற்றிக் கூறியபோது குறைசிக் காபிர்கள் அதை ஏற்க மறுத்ததுடன் அதைப் பரிகசிக்கவும் செய்தனர். நிராகரிப்பாளர்களில் ஒருவன் நபியவர்களிடம் வந்து இந்தப் பின்னணியில் தான் கூறினான் அப்போதுதான் இவ்வத்தியாயத்தின் ஆரம்பப் பகுதி அருளப்பட்டது.

- 1 முதல் 7 வரையான வசனங்கள் காபிர்கள் மறுமையை நிராகரிப்பதற்கான காரணத்தைக் கூறி அவர்களின் வாதத்தை முறியடிக்கின்றது.

- அவர்கள் மறுமையை அண்மிக்கமுடியாத அளவு தொலைதூரத்தில் இருப்பதாக கருதுவதனால் அவர்கள் மறுமை சாத்தியமுடையது என்பதனை நம்ப மறுக்கின்றனர்.
- அல்லாஹ்தான் காலத்தைக் கட்டுப்படுத்துகிறான். அவன் ஒருபோதும் காலத்தால் கட்டுப்படுத்தப் படுவதில்லை.
- அல்லாஹ் புவியில் உள்ளவர்களுக்கு ஒருவிதமாகவும் விண்ணில் உள்ளவர்களுக்கு இன்னொரு விதமாகவும் காலக்கணிப்பை வகுத்துக் கொடுத்துள்ளான்.
- மலக்குகளின் ஒரு நாள், புவியில் உள்ளவர்களின் ஐம்பதாயிரம் வருடத்திற்குச் சமமானது.
- காலம் தொடர்பான நிதர்சனம் நிராகரிப்பாளர்களின் வாதத்தை முறியடிக்கின்றது.
- 8 – 18 வரையான வசனங்கள் மறுமை நாள் நிகழ்வுகளையும் அப்போது காபிர்களின் பரிதாபகரமான நிலையையும் வர்ணிக்கின்றது.
- காபிர்கள் உலகில் தமக்குச் சொந்தமானதை அல்லது சொந்தமில்லாத அனைத்ததையும் பகரமாகக் கொடுத்தாவது மறுமையின் வேதனையில் இருந்து தப்பிக்க முயற்சிப்பர்.
- நரக நெருப்பில் இருந்து இவர்களால் ஒருபோதும் தப்பிக்க முடியாது. அவர்கள் வெருண்டோடும் போது அது அவர்களைப் பின்னால் விரட்டிச் செல்லாது. மாறாக வெருண்டோடும் அவர்களை அது தன்னிடத்திற்கு கவர்ந்திழுக்கும்.
- மறுமையை நிராகரிப்போரைப் பரிகசிக்கும் விதமாக மறுமைக்காட்சி எழுத்துக்களால் உருவகப்படுத்துள்ளமை அல்குர்ஆனின் இலக்கியச் சிறப்பாகும்
- **கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.**
- **அரும்பதங்கள்**

| | |
|---|---|
| வினவுபவன் | سائل |
| நிகழக்கூடியது | واقعٌ |
| தடுக்கக் கூடியவன் எவனுமில்லை | ليس له دافعٌ |
| உயர் பாதைகள் உடைய | ذي المعارج |
| ஐம்பதாயிரம் வருடங்கள் | خمسين الف سنة |
| பொறுமையாக இருங்கள் | فاصبر |
| பழுக்கக் காய்ந்த செம்பைப் போல | كالمُهل |

| | |
|---|---|
| பஞ்சைப் போல | كـالعهن |
| நண்பன் | حَمِيـمٌ |
| பாவி | المُجـرِمُ |
| பரிகாரமாக கொடுக்கிறான் | يفتـدي |
| மனைவி | صـاحبة |
| சொந்தங்கள் | فصـيلة |
| காப்பாற்றிக் கொள்கிறான் | يُنجيـه |
| நரக நெருப்பு | لظـى |

: • **ஸூரா அல் இஸ்ரா 23 - 27 (04)**

- ஸூரா அல் இஸ்ரா 23 - 27வரையான வசனங்களை ஒரு மாணவனைக் கொண்டு ஓத வையுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இவ்வத்தியாயம் மக்காவில் நபியவர்களின் மிஃராஜ் நிகழ்வைத் தொடர்ந்து அருளப்பட்டது
  - 23 – 27 வரையான வசனங்கள் பிள்ளைகள் பெற்றோருடன் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கம் பற்றிப் பேசுவதுடன் செலவு செய்தல் தொடர்பான வழிகாட்டலையும் வழங்குகிறது.
  - ஏகத்துவக் கொள்கையோடு பெற்றோருக்கு நன்மை செய்தல் இணைத்துக் கூறப்பட்டதன் மூலம் பெற்றோரின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
  - மக்காக்காலகட்டத்தின் இறுதிப்பகுதியில் அருளப்பட்ட இவ்வசனங்களுக்கும் ஆரம்ப கால கட்டத்தில் அருளப்பட்ட வசனங்களுக்கும் இடையே இலக்கிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.
  - அறபு வசனங்களில் காணப்படுகின்ற அரும்பதங்களை விளக்குங்கள்.

- கழா என்றால் விதியாக்கினான் என்று பொருள். இவ்வகையில் அல்லாஹ்வைத்தவிர வேறொன்றையும் வணங்கக் கூடாது என்பதும் பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதும் விதியாக்கப்பட்ட விடயமாகும்.
- அல்லாஹ்வின் விதிக்கு மாறாகநடப்பது மிகப் பெரிய குற்றமாகும்.
- ''சீ'' என்ற வார்த்தை குறைந்த பட்ச வெறுப்பைக் காட்டக்கூடிய வார்த்தையாகும். அதைக்கூட பெற்றோருக்கு உபயோகிக்கக் கூடாது

என்பதன் மூலம் பெற்றோரின் மனதைப் புண்படுத்தும் எந்த ஒன்றையும் செய்யக் கூடாது என்ற விடயம் உணர்த்தப்படுகிறது.

- ''அன்பு, அருள், கருணை என்பவற்றினாலான பணிவு எனும் இறக்கையை அவர்களுக்காகத் தாழ்த்துவீராக'' என்று கூறும் போது பறவை தன்குஞ்சுகளை இறக்கையினால் அரவணைத்தல் போன்ற ஓர் உருவகத்தைத் தருகிறது.
- உருவக அணி என்பது இலக்கிய நயம் மிகுந்த மொழிப் பிரயோகமாகும்.
- நாம் எவ்வளவு தான் பெற்றோரை அரவணைத்தாலும் அது அவர்கள் எம்மைப் பெற்றெடுத்து அரவணைத்ததற்கு ஈடாகாது. எனவே அவர்களின் சேவைக்கு ஈடாக அவர்களுக்கு அருள் புரியுமாறு ரப்பு இடம் பிரார்த்திக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.
- வீண்செலவு செய்ய வேண்டாம் என்பதைக் குறிப்பிட வலாதுபத்ஸிர் என்ற சொல் பிரயோகிக்கப்பட்டுள்ளது.
- வீண் செலவு செய்தல் எனும் பொருள் தரும் பத்ஸர என்ற சொல் தூவி விதைக்கப்படும் தானியத்தைக் குறிக்கும் பத்ர் என்ற சொல்லில் இருந்து தோன்றியதாகும். இதன் மூலம் பரந்த வயல் வெளியில் தானியத்தை அள்ளி வீசும் விவசாயியின் செயல் செல்வத்தை வீசி செலவுசெய்வதற்கு உவமானமாகக் கூறப்பட்டுள்ளது.
- 19ஆம் வசனம், உலோபித்தனம் காட்டுவதற்கு கைகளைக் கழுத்துடன் கட்டிக்கொண்டவனையும், தனக்கென்று எதனையும் வைத்துக் கொள்ளாமல் செலவு செய்வதற்கு கைகளை நீட்டி விரித்துக் கொண்டவனையும் உருவகப்படுத்துகிறது.
- ''உறவுக்குரியவர்களுக்கு அதன் உரிமையை வழங்குவீராக. இன்னும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும்'' என்ற வசனம் செலவு செயதல் பற்றி சூட்சுமமாகக் குறிப்பிடப்படுகிறது.
- ''அதன் உரிமை'' எனும் பிரயோகம் உறவு முறையின் உரிமை, ஏழ்மையின் உரிமை, வழிப்பயணத்தின் உரிமை என்ற பல கருத்துக்களைத் தருகிறது.
- மேற்படி பிரயோகத்தின் மூலம் ஒருவனின் செல்வத்தில் அவனது உறவினருக்கும் ஏழைகளுக்கும். வழிப்போக்கருக்கும் பங்குண்டு, மேலும் அப்பங்கு எல்லோருக்கும் ஒரே அளவானதல்ல என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**அரும் பதங்கள்**

| | |
|---|---|
| கட்டளை இட்டான்/ தீர்ப்பளித்தான் | قضى |
| முதுமை அடைகிறான் | يبلغن |
| வணங்க வேண்டாம் | الا تعبدوا |
| இருவரும் | كلاهما |
| வீண்விரயம் செய்யாதீர் | لا تبذر |
| அவனைத் தவிர | الا إياه |
| அவர்கள் இருவரையும் விரட்ட வேண்டாம் | ولا تنهرهما |
| உறவினர்கள் | ذالقربى |
| பெற்றோர் | بالوالدين |
| பணிவு | جناح الذل |
| உபகாரம் | احسانا |

**தேர்ச்சி 3.0 : ஹதீஸ்களை இலக்கிய இரசனையோடு நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : ஹதீஸ்களில் உள்ளடங்கியுள்ள இலக்கியப்பாங்கை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 10**

**கற்றல் பேறுகள்:**

- தெரிவு செய்யப்பட்ட ஹதீஸ்களின் சொல் விளக்கத்தைக் கூறுவார்.
- அந்த ஹதீஸ்களின் கருத்தை தனது மொழியில் எடுத்துரைப்பார்.
- ஹதீஸ்களில் காணப்படும் இலக்கிய நயங்களை எடுத்துக் காட்டுவார்.
- அந்த ஹதீஸ்கள் எடுத்துக் கூறும் போதனைகளை தமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • ஹதீஸ்கள் என்றால் என்ன என்று மாணவர்களிடம் வினவி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

وصـف الجـاحظ أحاديـث الرسـول "هـي الكـلام الـذى قـل عـدد حروفـه وكـثرت معانيـه"

•

- அல்குர்ஆனை அடுத்து மிகப் பெரிய இலக்கிய வடிவமாக ஹதீஸ்களே காணப்படுகின்றன. ஹதீஸ்களில் கையாளப்பட்டுள்ள சொற்கள் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. அவை வலிந்து கூறப்பட்டவையல்ல, வரட்டுத்தன்மை கொண்டவையுமல்ல. சிக்கல் நிறைந்தவையுமல்ல. மாறாக அழகிய மொழியும் ஆழ்ந்த கருத்துக்களும், சுவைமிகு சொற்களும் சிறந்த உருவகமும் கொண்டவையாகும்.

مثـل الـذي يعلـم النـاس الخـير وينسـى نفسـه مثـل الفتيلـة تضـيئ علـى النـاس وتحـرق نفسـها

''தன்னை மறந்துவிட்டு மக்களுக்கு நன்மையைப் போதிப்பவருக்கு உதாரணம் ஒரு நெருப்புத் (மெழுகுத்) திரியைப் போன்றதாகும். அது தன்னை எரித்துக் கொண்டு பிறருக்கு ஒளியைக் கொடுக்கிறது.

- சொற் சுருக்கமும், கருத்துச் செறிவும் மிக்கதாக ஹதீஸ்கள் அமைந்துள்ளன என்பதற்கு இது ஒரு சான்றாகும்.
- ஆழமான ஒரு கருத்து எளிமையான உதாரணம் மூலம் அழகுற உள்ளத்தை தொடக்கூடியதாக இங்கு முன்வைக்கப்படுகிறது.
- பிறருக்கு நன்மையை உபதேசிக்கிறார். ஆனால் தான் அவற்றை வாழ்வில் எடுத்து நடப்பதில்லை அத்தகையவர் அழிவுக்குட்படுகிறார். மொழுகுவர்த்தியாயிருந்து பிறருக்கு ஒளியூட்டி தன்னை அழித்துக் கொள்வதில் பயனில்லை என்பதை இந்நபி மொழி அழகிய உவமை ஒன்றின் மூலம் முன்வைத்துள்ளது.

- மக்களுக்கு போதனை செய்பவர் தானும் அவற்றை வாழ்வில் எடுத்து நடக்க வேண்டும். வாய்நுனியில் தேன் வடிய அடுக்குமொழியில் பேசுவது அறிவுமல்லல; போதனையுமல்ல. போதனைகள் செயற்பாடாக அமைதல் வேண்டும். செய்யாதவற்றை பிறருக்கு போதிப்பதில் பயனில்லை என்பதை இந்நபி மொழி உள்ளத்தை தொடும் விதமாக முன்வைக்கிறது.
- இந்த ஹதீஸ் தரும் போதனையை ஒத்ததாக குர்ஆன் போதனைகளும் அமைந்துள்ளன. அவற்றை ஒப்புநோக்கி விளக்கமளிக்கலாம்.

تأمرون الناس بالبر وتنسون أنفسكم وأنتم تتلون الكتاب أفلا تعقلون (البقرة 44)

நீங்கள் உங்களை மறந்துவிட்டு மனிதர்களுக்கு நன்மை செய்யும்படி ஏவுகிறீர்கள். வேதத்தை ஓதிக் கொண்டே இவ்வாறு செய்யும் நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

يا أيها الذين آمنوا لم تقولون مالا تفعلون

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் செய்யாத காரியங்களை ஏன் கூறுகிறீர்கள் (61:2)

- **அரும்பதங்கள்.**

| | |
|---|---|
| போல | مثل |
| நன்மை/ நற்செயல் | الخير |
| போதிக்கிறார் | يعلم |
| மறக்கிறார் | ينسى |
| நெருப்புத்திரி | الفتيلة |
| பிரகாசிக்கிறது; ஒளிகொடுக்கிறது | تضيئ |
| அழித்தல், எரித்துக் கொள்கிறான் | تحرق |

- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள ஹதீஸ்களை அவற்றின் பதவிளக்கத்துடன், மொழி பெயர்ப்பையும் வழங்கி, அவற்றில் காணப்படும் இலக்கிய நயங்களையும் எடுத்துக்காட்டி அவை தரும் போதனைகளையும் சுட்டிக் காட்டி விளக்கமளியுங்கள்.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- **இணைப்பு 3.1.1**

(01)

مثل الجليس الصالح كمثل صاحب المسك ان لم يصبك منه شيئ أصابك من ريحه ومثل الجليس السوء كمثل صاحب الكير ان لم يصبك منه سواده أصابك من دخانه

ஒரு நல்ல நண்பனுக்கு உதாரணம் கஸ்தூரி (வாசனை) வைத்துக் கொள்பவரை ஒத்ததாகும். அவர் உங்களுக்கு எதையும் தரவில்லையென்றாலும் அதன் நறுமணமாவது உங்களை வந்தடையும். தீய நண்பனுக்கு உதாரணம், கொல்லனின் சூளையை போன்றது. நீங்கள் அதன் கருமையிலிருந்து தப்பிக் கொண்டாலும் கூட அதன் புகையாவது உங்களை வந்தடையும். (அபூதாவுத்)

| | |
|---|---|
| நல்ல நண்பன் | الجليـــس الصـــــالح |
| கஸ்தூரி வைத்திருப்பவர் | صـــاحب المسـك |
| பீடித்தது/ அடைந்து கொண்டான் | أصـــاب |
| நறு மண வாசனை | ريــح |
| கெட்ட நண்பன் | الجليـــس الســـوء |
| கொல்லன் | صـــاحب الكـــير |
| கறுப்பு / நெருப்புத்தணல் | ســواد |
| புகை | دخان |

Ç

02.

الصـــيام جنـــة مـــالم يخرفهـــا

''நோன்பு ஒரு கேடயமாகும், அதனை உடைக்காமல் இருக்கும்வரை (நஸாஈ)

| | |
|---|---|
| நோன்பு | الصـــــيام |
| கேடயம் | جنـــة |
| உடைத்தான் | خرف |

03.

اذا مـــررتم بريـــاض الجنـــة, فـــارتعوا قـــال ومـــا ريـــاض الجنـــة قـــال حلـــق الـــذكر

''நீங்கள் சொர்க்கப் பூங்காக்களின் பக்கமாகச் சென்றால் நன்றாக மேய்ந்து கொள்ளுங்கள். சொர்க்கப் பூங்கா என்றால் என்ன? அது திக்ருடைய சபைகளாகும். (அஹ்மத்)

| | |
|---|---|
| நீங்கள் கடந்து சென்றால் | اذا مـــررتم |
| சுவனத்தின் பூங்கா | ريـــاض الجنـــة |
| மேய்ந்து கொள்ளுங்கள் | ارتعـــوا |
| திக்ருடைய அவை | حلـــق الـــذكر |

04.

ان الــذى ليــس فــى جوفــه شــيئ مــن القــرآن كالبيــت الخــرب (الترمــذى)

''எவருடைய உள்ளத்தில் குர்ஆனின் ஒரு சிறு பகுதியேனும் மனனமாக இல்லையோ அவர் பாழடைந்த வீட்டைப் போன்றவராவார்.'' (திர்மிதி)

| | |
|---|---|
| உள்ளம் | جوف |
| பாழடைந்த வீடு | كالبيــت الخــرب |

**தேர்ச்சி 4.0 : தஜ்வீத் கலையையும் அதன் பிரிவுகளையும் நயந்து கூறுவார்**

**தேர்ச்சி மட்டம் 4.1 : அல்குர்ஆனை ஓதுவதற்கான சட்டங்களையும் ஓதும் முறைகளையும் அறிந்து தெரிவு செய்யப்பட்ட வசனங்களை தஜ்வீத் சட்டங்களை அனுசரித்து ஓதுவார்.**

**பாடவேளை : 12**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஒழுங்காக ஓதக் கற்றுக் கொள்வார்.
- தஜ்வீத் சட்டங்களை விளங்கிக் கூறுவார்.
- தெரிவு செய்யப்பட்ட சூறாக்களில் தஜ்வீத் சட்டங்களை இனங்கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**''மீம்'' இற்கான சட்டங்கள் (01)**

: • பிரபலமான காரி ஒருவரின் கிராஅத்தை ஒலி நாடாவில் போட்டுக் காட்டி, கிராஅத்தின் இனிமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை கேட்டறியுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - அஹ்காமுல் மீம் அஸ்ஸாகினா என்பது குர்ஆனை ஓதும் போது கவனிக்க வேண்டிய சுகூன் செய்யப்பட்ட மீமுக்குரிய சட்டங்களாகும்
    - சுகூன் செய்யப்பட்ட மீமுக்குரிய கட்டங்கள் மூவகைப்படும்.
    - நூன் மீம் ஆகிய இரண்டும் சத்து செய்யப்படும் போது நன்கு உன்னா செய்ய வேண்டும்.
    - உன்னா என்பது இராகமெடுத்து ஓதுவதாகும்
- சுகூன் செய்யப்பட்ட மீமினைப் பின்தொடர்ந்து வரும் எழுத்துக்களுக்கு அமைய மீமுஸ்ஸாகினாவை ஓதுவதற்குரிய சட்டங்கள் மூவகைப்படுகின்றன.
- அவை வருமாறு

  இழ்ஹாருன் ஷபவி (உதட்டினால் வெளியாக்கி ஓதல்)

  இஹ்பாவுன் ஷபவி (உதட்டினால் மறைத்து ஓதல்)

  இத்ஆமுன் ஷபவி (உதட்டினால் நுழைத்து ஓதல்)
- மீம் உதட்டினால் வெளிப்படும் எழுத்து என்ற காரணத்தினால் அதற்குரிய சட்டங்களும் உதடு சார்ந்த உச்சரிப்பு உடையவைகளாகவே உள்ளன.

- **இஹ்பாவுன் ஷபவி (உதட்டினால் மறைத்து ஓதல்)**

- சுகூன் செய்யப்பட்ட மீமினைத் தொடர்ந்து ''பா'' வந்தால் மீமை பாவினால் மறைத்து இருமாத்திரை அளவு உன்னாவுடன் ஓதவேண்டும். இதுவே இஹ்பாவுன் ஷபவி எனப்படுகிறது

  உதாரணம்: 1. (34:8)

  2. (9:55)

  3. (22:2)

- **இத்ஆமுன் ஷபவி (உதட்டினால் நுழைத்து ஓதல்)**

  சுகூன் செய்யப்பட்ட மீமினைத் தொடர்ந்து இன்னொரு ''மீம்'' வந்தால் அதனை இரட்டிப்பாக்கி 2 அல்லது 3 மாத்திரை அளவு உன்னாவுடன் ஓத வேண்டும். இது இத்ஆமுன் ஷபவி எனப்படுகறது.

  உதாரணம்: 1. (8:29)

  2. (26:206)

  3. (56:58)

- **இழ்ஹாருன் ஷபவி (உதட்டினால் வெளியாக்கி ஓதல்)**

  - சுகூன் செய்யப்பட்ட மீமினைத் தொடர்ந்து ''பா'', ''மீம்'' தவிர்ந்த எந்த எழுத்து வரினும் அப்போது சுகூன் செய்யப்பட்ட மீமை வெளிப்படுத்தி உன்னா இன்றி ஓத வேண்டும். இதுவே இழ்ஹாருன் ஷபவி எனப்படுகிறது.

  உதாரணம்: 1. (56:59)

  2. (51:53)

  3. (81:28)

  - **ஷத்து செய்யப்பட்ட நூனும் (நூன் முஷத்தத்), ஷத்து செய்யப்பட்ட மீமும் (மீம் முஷத்தத்)**

  - நூன், மீம் ஆகிய இரு எழுத்துக்களும் ஷத்து செய்யப்பட்டுவரின் அவ்விரு எழுத்துக்களையும் 2 அல்லது 3 மாத்திரை அளவு உன்னா செய்து ஓத வேண்டும்.

  உதாரணம்: 1. (37:6)

  2. (78:21)

  3. (27:70)

  4. (7:11)

  - கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

## ‘‘ரா’’ விற்கான சட்டங்கள் (02)

: • அஷ்ஷெய்க் கலீலுல் ஹுஸ்ரி அவர்களின் முரத்தல் முறையிலான கிராஅத்தை ஒலிக்கச் செய்து, அவர் நிறுத்தற்குறிகளை அனுசரிக்கும் விதம் தொடர்பில் மாணவர்களின் கருத்துக்களை வினவுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - அஹ்காமுல் ‘‘ரா’’ என்பது குர்ஆனை ஓதும் போது ‘‘ரா’’வை உச்சரிக்க வேண்டிய முறைபற்றிக் கூறும் சட்டங்களாகும்.
  - ‘‘ரா’’வை வல்லினமாகவும் மெல்லினமாகவும் உச்சரிக்கவேண்டிய சந்தர்ப்பங்களை ‘‘ரா’’ விற்குரிய சட்டங்கள் விளக்குகின்றன.
  - நிறுத்தற் குறிகளை அனுசரிக்காமல் ஓதுவதால் சிலவேளை கருத்துப் பிழைகள்கூட ஏற்படலாம்.
  - அல்குர்ஆனில் பல்வேறு வகையான நிறுத்தற்குறிகள் கையாளப்பட்டுள்ளன.
- பின்வரும் சந்தர்ப்பங்களில் ‘‘ரா’’வை **வல்லினமாக** ஓத வேண்டும்.
  1. ‘‘ரா’’ பத்ஹ அல்லது லம்மத் பெற்று வருதல். உதாரணம்: 2:16, 2:28, 2:177, 18:36
  2. ‘‘ரா’’சுகூன் பெற்றும் அதற்கு முன்னுள்ள எழுத்து பத்ஹ அல்லது லம்மத் பெற்று வருதல். உாரணம்: 2:7, 2:252
  3. ‘‘ரா’’ மவ்கூப் ஆகவும் அதற்கு முன்னால் யா அஸ்ஸாகின் அல்லாத சுகூன் பெற்ற ஓர் எழுத்தும் அதற்கு முன்னால் பத்ஹ அல்லது லம்மத் பெற்ற ஓர் எழுத்தும் வருதல். உதாரணம்: 103:3, 103:2
- பின்வரும் சந்தர்ப்பங்களில் ‘‘ரா’’வை **மெல்லினமாக** ஓத வேண்டும்.
  1. ‘‘ரா’’ கஸ்ரா பெற்று வருதல். உதாரணம்: 2:54, 2:75, 113:2, 6:97
  2. ‘‘ரா’’சுகூன் பெற்றும் அதற்கு முன்னுள்ள எழுத்து கஸ்ரு பெற்றும் வருதல் உதாரணம்: 2:6
  3. ‘‘ரா’’ மவ்கூப் ஆகவும் அதற்கு முன்னால் யா அஸ்ஸாகினும் அதற்கு முன்னால் கஸ்ரு பெற்ற ஓர் எழுத்தும் வருதல். உதாரணம்:3:180, 34:12, 17:1, 3:184
- ‘‘ர அல் மவ்கூப்’’ என்றால் ‘‘நிறுத்தப்படும் ரா ‘‘
- ‘‘யா அஸ்ஸாகின’’ என்றால் சுகூன் செய்யப்பட்ட யா
- அல்குர்ஆனில் வந்துள்ள நிறுத்தற் குறிகள் பல்வகைப்பட்டவை
  1. கட்டாயம் நிறுத்த வேண்டியவை
  2. நிறுத்தக் கூடாதவை
  3. நிறுத்தாமல் ஓதுவது சிறந்தது

4. நிறுத்துவது சிறந்தது

5. நிறுத்தலாம். நிறுத்தாமலும் இருக்கலாம்.

6. ஏதாவது ஒன்றில் நிறுத்த வேண்டும்.

- மேற்கூறப்பட்ட நிறுத்தல் குறிவகைகள் ஒவ்வொன்றுக்கும் உதாரணம் காட்டுக.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 5.0 : அன்றாடம் ஓதிவரும் துஆக்களை அறிந்து அதனை நயந்து கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1.1 : குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஓதவேண்டிய துஆக்களை இனங்கண்டு அவற்றில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளங்கி பிரயோகிப்பார்.**

**பாடவேளை : 09**

**கற்றல் பேறுகள்:**

- அன்றாடம் ஓத வேண்டிய சந்தர்ப்ப துஆக்களை அறிந்து நயந்து ஓதி வருவார்.
- துஆக்களில் காணப்படும் கருத்துச் செறிவினை எடுத்துக் கூறுவார்.
- அவற்றில் காணப்படும் இலக்கிய நயங்களை கண்டறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

: • மாணவர்கள் வழக்கமாக ஓதிவரும் காலை மாலை துஆக்கள் பற்றி கேட்டறிந்து பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- காலை மாலையில் ஓதக்கூடிய துஆக்களில் ஒன்றான கீழ்வரும் துஆவை ஓதிக்காட்டி அதன் பொருளை விளக்குங்கள்.

حَسْــــبِيَ اللهُ لا إلَـــــهَ إلا هُـــوَ عَلَيْـــهِ تَوَكَّلْـــتُ وَهُـــوَ رَبُّ العَـــرْشِ العَظِيـــــمِ

பொருள் :

அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். அவனைத் தவிர வேறு இலாஹ் இல்லை. (என் காரியங்கள் யாவற்றிலும்) அவன்மீது நான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன். மேலும் அவன் பிரமாண்டமான அர்ஷின் அதிபதியாவான்.

- மனிதன் பிரார்த்திக்கும் போது தனது எல்லா நிலைகளிலும் அல்லாஹ் மட்டுமே தனக்கு போதுமானவன் என வேண்டி பிரார்த்திக்க இந்த துஆ கற்றுத் தருகிறது.
- வணக்கத்துக்குரியவன், அன்புக்குரியவன், உதவிதேட தகுதியானவன் ஆகிய பொருள்களை உள்ளடக்கிய Åã ஆக அல்லாஹ்வை மட்டுமே மனிதன் தனக்குப் போதுமானவனாக ஆக்கிக் கொள்வதற்கான நியாயத்தை இப்பிரார்த்தனை குறிப்பிடுகிறது.
- அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கின்ற, ஏழுவானங்களுக்கு மேலால் இருக்கின்ற பிரமாண்டமான அர்ஷின் சொந்தக்காரனான அனைத்துக்கும் தகுதி வாய்ந்த Çããமீது தவக்குல் வைக்க வேண்டும் என இந்த துஆவில் கற்றுத் தரப்படுகிறது.

- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள துஆக்களையும் அவற்றின் மொழிபெயர்ப்பு பொருள்கள், அணி, ஏனைய இலக்கிய நயங்கள் என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்கமளியுங்கள்.
- கற்றற்பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- اللهمَّ عَافِنِي في بدني، اللهم عافني في سمعي, اللهمَّ عافِنِي في بَصَري، لا إله إلا أنتَ. أللهمَّ إنِّي أعُوذ بكَ من الكفر والفقر وأعُوذ بكَ مِن عذابِ القبر، لا إله إلا أنت
- பொருள் :

  இறைவா! எனது உடலில் எனக்கு சுகத்தைத் தருவாயாக. இறைவா! எனது கேள்வியில் எனக்கு சுகமளிப்பாயாக. இறைவா! எனது பார்வையில் எனக்கு சுகமளிப்பாயாக. உன்னைத் தவிர வேறு இலாஹ் இல்லை. யாஅல்லாஹ் குப்ரிலிருந்தும்(நிராகரிப்பு), வறுமையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். கப்றுடைய வேதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். உன்னைத் தவிர வேறு இலாஹ் இல்லை.

- மனிதன் தனது உடல் நலம் வேண்டி பிரார்த்திக்கும் போது குறிப்பாக செவிப்புலன், கட்புலன் வேண்டியும் பிரார்த்திக்க இந்த பிரார்த்தனை கற்றுத்தருகின்றது.
- பொதுவான ஒன்றை சொல்லிவிட்டு (உடல்) பின்னர் குறிப்பாக சிலவற்றை (கேள்வி, பார்வை) சொல்லும் மரபு கையாளப்பட்டுள்ளது.
- நிராகரிப்பிலிருந்து பாதுகாப்பு தேடுவதுபோல் நிராகரிப்புக்கு இட்டுச் செல்லும் வறுமையிலிருந்தும் பாதுகாப்பு கேட்க வேண்டும் என இந்த துஆ கற்றுத் தருகின்றது.
- குப்ருடன் (நிராகரிப்புடன்) வறுமை இணைத்து கூறப்பட்டுள்ளது.
- மண்ணறை வாழ்வில் மண்ணறை வேதனையிலிருந்து பாதுகாப்புப் பெற்றவர் மறுமை வாழ்வின் ஏனைய கட்டங்களிலும் ஈடேற்றம் பெறலாம்.
- اللهمَّ بكَ أصبحنا، وبكَ أمسَينا وبكَ نحيَا وبكَ نمُوتُ وإليكَ النشور

  இறைவா! உன்னைக் கொண்டே காலைப் பொழுதை அடைந்தோம். மேலும் உன்னைக் கொண்டே மாலைப் பொழுதை அடைந்தோம். இன்னும் உன்னைக் கொண்டே உயிர் வாழ்கிறோம். உன்மூலமே மரணிக்கின்றோம். மேலும் உன்னிடத்திலேயே ஒன்று சேரவேண்டியிருக்கிறது.

- ஒருவனது வாழ்வு இறை நியதிப்படியே அமைகின்றது என்பதனை இந்த துஆ சுட்டிக்காட்டுகிறது.
- குறிப்பிட்ட கால வாழ்வினை உலகில் பெற்ற மனிதன் தனது தவணையின் முடிவை எதிர்பார்த்து இருக்க வேண்டும். அது காலையிலோ மாலையிலோ இடம்பெறலாம் என்பதனை இப்பிரார்த்தனையில் விளங்கிக் கொள்ளலாம்.
- Çææ விடமிருந்து வந்த மனிதன் அவனிடமே மீளவேண்டும் என்பதனை இந்த துஆ சுட்டிக்காட்டுக்கிறது.
- أللهمَّ أصلح لي ديني الَّذي هُوَ عصمة أمري واصلح لي دنيايَ الَّتى فيها معاشي واصلِحْ لي آخرتي الَّتي فيها معادى، واجعل الحياة زيادةً لي فى كل خيرٍ واجعل الموتَ راحة لي من كل شرٍّ

  பொருள் :

  யா அல்லாஹ் எனது விடயங்களுக்கு பாதுகாப்பாக இருக்கின்ற எனது மார்க்கத்தை (தீனை) எனக்கு சீர்படுத்துவாயாக. மேலும் எனது வாழ்வு அமைந்துள்ள எனது உலகை (துன்யாவை) நீ எனக்கு சீர்படுத்துவாயாக. நான் மீளும் இடமாக இருக்கின்ற எனது மறுமையினை எனக்கு சீர்படுத்துவாயாக. (மேலும் நன்மையான அனைத்திலும் எனது வாழ்க்கையை அதிகப்படுத்தி தருவாயாக. இன்னும் அனைத்து தீங்கிலிருந்தும் விமோசனம் தரக்கூடியதாக மரணத்தை எனக்கு அமைத்தருள்வாயாக!
- துன்யாவை விட தீனை முற்படுத்தி பிரார்த்திக்க வேண்டும்.
- உழைப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் துன்யா இருப்பது போன்று சகல காரியங்களினதும் பாதுகாப்புக்கு (தீன்) மார்க்கம் தான் பிரதானமானதாக அமையும்.
- எனது மார்க்கம் எனது உலகு எனது மறுமை வாழ்வு எனது மரணம் என ஒவ்வொன்றையும் தனியாக சீர்படுத்தி தருமாறு வேண்டப்பட்டுள்ளது.
- நன்மையான காரியங்களுக்காக நீண்ட ஆயுளை பிரார்த்திக்கலாம்.

இணைப்பு 5.1.1

**دعاء قنوت الوتر**

**اللهم اهدني فيمن هديت, وعافني فيمن عافيت,وتولني فيمن توليت وبارك**
**ـي فيما أعطيت وقني شرما قضيت فانك تقضي ولا**
**يقضى عليك, انه لا يذل من واليت ولا يعز من عاديت**
**تباركت ربنا وتعاليت**

دعاء قضاء الدين

اللهم اكفني بحلالك عن حرامك وأغنني بفضلك عمّن سواك

دعاء من استعصب عليه أمر

اللهم لا سهل الا ما جعلته سهلا, وأنت تجعل الحزن اذا شئت سهلا

الدعاء للميت في الصلاة عليه

اللهم اغفر له وارحمه وعافه واعف عنه وأكرم نزله ووسع مدخله واغسله بالماء والثلج والبرد ونقه من الخطايا كما نقيت الثوب الأبيض من الدنس, وابدله دارًا خيرًا من داره وأهلا خيرًا من أهله وزوجا خيرًا من زوجه وادخله الجنة واعذه من عذاب القبر ومن عذاب النار

دعاء الأذان

اللهم رب هذه الدعوة التامة, والصلاة القائمة,آت محمدًا الوسيلة والفضيلة وابعثه مقامًا محمودًا الذي وعدته انك لا تخلف الميعاد

دعاء زيارة القبور

السلام عليكم اهل الديار من المؤمنين والمسلمين وانا ان شاء الله بكم لاحقون ويرحم الله المستقدمين منا والمستأخرين أسأل الله لنا ولكم العافية

- இவற்றில் காணப்படும் அரும் பதங்களை விளக்குங்கள்
- மொழி பெயர்ப்பை எடுத்துக் கூறுங்கள்
- இலக்கிய நயங்களை சுட்டிக்காட்டி அதன் இரசனையை சுவைக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : அறபுக் கவிதைகளை வாசித்து இலக்கிய நயங்களை வெளிப்படுத்திக் காட்டுவார்**

**தேர்ச்சி மட்டம் 6.1 : தெரிவுசெய்யப்பட்ட கவிதைகளை விளங்கி அக்கவிதைகளில் காணப்படும் நயங்களைக் கண்டறிந்து எடுத்துக் காட்டுவார்.**

**பாடவேளை : 08**

**கற்றல் பேறுகள்:**

- கவிதைகளை இரசனை உணர்வோடு வாசிப்பார்.
- கவிதைகளில் இடம்பெறும் விழுமியப் பண்புகளையும் இலக்கிய நயங்களையும் எடுத்துக் காட்டுவார்.
- கவிதையின் மையக் கருத்தை நயப்பார்.
- மொழி சார் அணிகளை கண்டறிந்து கூறுவார்.
- கவிதைகளைத் திரட்டி தொகுத்து காட்சிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- பின்வரும் கவிதையை ஓசை நயத்துடன் வாசித்துக் காட்டுங்கள்

كلما أدبني الدهر    أراني نقص عقلي
وإذا ما ازددت علما    زادني علما بجهلي

காலம் எனக்குக் கற்பிக்கும் போதெல்லாம்
அது எனக்கு எனது அறிவின் குறைவையே காட்டியது
எனது அறிவு அதிகரிக்கும் போது
எனது அறியாமையை அதிகம் அறிந்து கொள்கிறேன்.

- இமாம் ஷாபிஈயினுடைய இந்தக் கவிதை பொருள் வலிமை கொண்டது; செவிக்கு இனிமை தரவல்லது; இதிலுள்ள ஒத்த ஓசைச் சொற் பிணைப்புக்கள் இரசனை மிக்கவை. உ-ம் :

  زادني - اراني
  جهلي - عقلي

- அறிவும் அனுபவமும் கூடும் போது பணிவும் கூடும், காலம் தான் அதனை கற்றுத் தருகின்றது. ஓர் அறிஞன் அறிவு தேடலின் போது தான் அறிவைப் பெறப் பெற இன்னும் அறிய வேண்டியவை ஏராளம் உள்ளன என்பதை உணர்வான் என்ற கருத்தை அழகாக இமாம் ஷாபிஈ முன்வைக்கிறார்.

- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள ஏனைய கவிதைகளிலும் மொழிபெயர்ப்பு, அரும்பத விளக்கம் என்பவற்றை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தி அவற்றில் அமைந்துள்ள சொல்நயம், ஓசைநயம், உருவகம், மொழி அணி, பொருளணி போன்றவற்றை எடுத்துக் காட்டி கவிதையின் நயத்தை இரசிக்கச் செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- **அரும்பதங்கள்**

| | |
|---|---|
| போதெல்லாம் | كلمـــا |
| எனக்கு கற்றுத்தந்தது / என்னைப் பண்படுத்தியது | أدّبـــــنى |
| காலம் | الدهر |
| எனக்குக் காட்டியது | ارانـــى |
| குறை | نقــص |
| எனது அறிவு | عقلـــى |
| ஆல் | اذا |
| அதிகரித்தது | ازداد |
| அறிவு | علـم |
| அதிகரித்தது | زاد |
| அறியாமை | جهل |

இணைப்பு 6.1.1

**01.**

اضــحى الاســلام لنــا دينــا     وجميــع الكــون لنــا وطنــا
توحيــد الله لنــا نــور     اعــددنا الــروح لــه سـكنا
بنيـــت فـــى الأرض مســـاجدنا     والبيـــت الأول كعبتنـــا
هــو أول بيــت نحفظــه     بحيــاة الــروح ويحفظنــا
فـــى ظـــلّ الســـيف تربّينـــا     وبنينـــا العـــزّ لـــدولتنا
علــم الاســلام علـــى الأيــا     م شــعار المجــد لعزتنـــا

**02.**

**العلــم**

أخـــي لـــن تنـــال العلـــم الا بســـتة

سأنبئك عن تفصيلها ببيان
ذكاء وحرص واجتهاد وبلغة
وصحبة استاذ وطول زمان

எனது சகோதரா! ஆறு அம்சங்களின்றி நீ ஒருபோதும் அறிவு பெற மாட்டாய். இதோ அவற்றை நான் உனக்கு விபரித்துச் சொல்கின்றேன்.

விவேகம், ஆர்வம், முயற்சி, அடைவு, மற்றும் ஆசிரியரின் சகவாசம், நீண்ட காலம் இவையே அந்த ஆறுமாகும்.

| | |
|---|---|
| நீ அடையவே மாட்டாய் | لن تنال |
| உனக்கு அறிவிக்கிறேன் | سأنبئك |
| விளக்கம் | تفصيل |
| சகவாசம்/ தோழமை | صحبة |
| ஆசிரியர் | استاذ |
| விவேகம் | ذكاء |
| ஆர்வம் | حرص |
| முயற்சி | اجتهاد |
| நீண்ட | طول |
| காலம் | زمان |

**03.**

توكلت فى رزقى على الله خالقى
وأيقنت ان الله لا شك رازقي
وما يك من رزقى فليس يفوتنى
ولو كان فى قاع البحار العوامق
سيأتى به الله العظيم بفضله

என்னைப் படைத்த அல்லாஹ்விடம் என் ரிஸ்கைப் பொறுப்புச்சாட்டிவிட்டேன். சந்தேகமின்றி அல்லாஹ்தான் எனக்கு ÑÒP அளிப்பவன் என்று உறுதியாக நம்பிக்கை கொண்டேன். எனக்குரிய ரிஸ்க் எதுவும் என்னைவிட்டும் தவறிப்போகமாட்டாது. ஆழ்கடலின் அடியில் தான் இருந்தாலும் மகத்தான அல்லாஹ் தன் அருளால் அவற்றைக் கொண்டு வந்து சேர்ப்பான்.

| | |
|---|---|
| நான் பொறுப்புச் சாட்டினேன் | توكلت |
| உணவு | رزق |

| | |
|---|---|
| படைப்பாளன் | خـالق |
| உறுதியாக நம்பினான் | ايقـن |
| சந்தேகமின்றி | لا شـك |
| உணவளிப்பவன் | رازق |
| இல்லை | ليـس |
| தவறியது | فـات |
| கடலின் அடி | قـاع البحـر |
| ஆழமானது | عميـق |
| சிறப்பு | فضـل |

**04.**

ان الفقيـه هـو الفقيـه بفعلـه
ليـس الفقيـه بنطقـه ومقالـه
وكـذا الـرئيس هـو الـرئيس بخلقـه
ليـس الـرئيس بقومـه ورجالـه
وكـذا الغـنى هـو الغـنى بحالـه
ليـس الغـنى بملكـه وبمـا لـه

நிச்சயமாக அறிஞன் என்பவன் தனது செயலால் அறிஞனாயிருப்பானேயன்றி தன் சொல்லாலும் வார்த்தைகளாலும் நின்றுவிடுபவனல்ல. அவ்வாறே, தலைவன் என்பவன் தனது பண்புகளால் தலைவனாக இருப்பவனே அன்றி தனது சமூகத்திற்கும் மக்களுக்கும் தலைவனாக இருப்பவனல்ல. செல்வந்தன் என்பவன், தனது நிலையில் செல்வந்தனாக - தேவையற்றவனாக இருப்பவனேயன்றி தனது சொத்து செல்வங்களால் செல்வந்தனாக இருப்பவனல்ல.

| | |
|---|---|
| சட்ட அறிஞன் | الفقيـه |
| தலைவன் | الـرئيس |
| நற் பண்புகள் | خلـق |
| சமூகம் | قـوم |
| மக்கள் | رجال |
| பணக்காரன் | الغـني |
| சொத்து | ملـك |
| செல்வம் | مال |

**05.**

احفظ لسانك ايها الإنسان
لايلدغنك انه ثعبان
كم فى المقابر من قتيل لسانه
كانت تهاب لقاءه الأقران؟

மனிதா உன் நாவைப் பேணிக்கொள் ஏனெனில்
அது ஒரு பாம்பு அது உன்னை தீண்டாதிருக்கட்டும்
நாவால் மடிந்தோர் புதைகுழிகளில் எத்தனையோபேர்?
அவர்களை சந்திக்க நண்பர்கள் கூட தயங்கினர்.

| | |
|---|---|
| பயந்தது | تَهَاب |
| பாதுகாத்துக் கொள் | إِحفَظ |
| சந்திப்பு | لِقَاءٌ |
| உனது நாவு | لِسَانَكَ |
| நண்பர்கள் | الأَقْرَانُ |
| தீண்டாதிருக்கட்டும் | لايلدغَنَّ |
| பாம்பு | ثُعبَانٌ |
| புதைகுழிகள் | المقَابِرُ |
| கொல்லப்பட்டவன் | قَتِيلٌ |

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 7.0 : அறபுக்கதைகளை வாசித்து, எழுதி, சுவைத்து வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 : அறபுக் கதைகளை திரட்டியும் வாசித்தும் நயம் கண்டு கூறுவார்.**

**பாடவேளை : 12**

**கற்றல் பேறுகள்:**

- கதைகளின் மையக்கருத்தை வெளிப்படுத்துவார்.
- கதைகளில் இடம்பெறும் பாத்திரங்களின் விழுமியங்களை எடுத்துக்காட்டுவார்.
- சிறிய கதைகளை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- கதைகளில் காணப்படும் இலக்கிய நயத்தை தமது கதைகளில் இணைக்கும் ஆற்றலைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- أعظَـــمُ يَــوْمٍ فِـــى حَيَــاتِي என்ற கதையை கருத்தூன்றி வாசிக்கச் செய்யுங்கள் கதையின் உள்ளடக்கம் பற்றி மாணவரது கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- கதையிலிருந்து தான் விளங்கியவற்றை தனது நடையில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கி அவற்றை நெறிப்படுத்துங்கள்.
- கதையில் உள்ள அரும்பதங்களை விளக்கி அவற்றின் பிரயோகத்தை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுங்கள். அரும்பதங்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க வழிப்படுத்துங்கள்.

<u>أعظـم يـوم فـى حيـاتى</u>

تـم اختيـارُ أحـدِ كبـار رجـال الصـناعة مـديرًا لشـركةٍ مشـهورةٍ، وأقـامَ لـهُ أصـدقاؤهُ حفـلا كبـيرًا بهـذهِ المناسـبَةِ

وكـانَ الرجـلُ، فـى هـذا الحفـل، سـعيدًا كُـلَّ السـعادةِ، فكـلُّ مَـن حولـهُ يؤكّـدون أنـهُ قـد حقّـقَ أكـبرَ نجـاحٍ فـى حياتِـه

اقـتربَ منـهُ صـديقٌ، وقـال لـه

"لابـدَّ أن يكـونَ هـذا اليـومُ أعظـمَ يـومٍ فـى حياتِـكَ"

فأجـابَ رجـلُ الصـناعةِ الكبـيرُ

"كـلا .. إن أعظـمُ يـومٍ فـى حيـاتى كـان وأنـا فـى الثانيـةَ عشـرةَ مـن عمـرى، عنـدما تسلّـمتُ أوّلَ أجـرٍ لـى، وهُوَجنيهـان فـى الأسـبوع

أخـذتُ الجنيهيـن، وذهبـتُ ألـى أمّـى، الّـتى كانـت تعمـلُ رغـمَ مرضـيها لأجـل تربيـتى بعـد وفـاةِ والـدى، وقلـتُ لهـا : لـن تضـترى بعـد اليـوم يـا أمـى أن

"تعملـــي وأنـــت مريضـــة، فقــد أصـــبحتُ أكســـبُ مـــا يكفينـــا"

- எனது வாழ்வில் மிக முக்கியமான நாள்

  தொழிலாளி ஒருவர் பிரபல்யமான கம்பனி ஒன்றின் தொழில் அதிபராக தெரிவு செய்யப்பட்ட போது அவருக்காக அவரது நண்பர்கள் பெரிய விழா ஒன்றினை ஏற்பாடு செய்தனர்.

  அவ்விழாவில் அவரைச் சூழ இருந்தவர்கள் "அவர் தனது வாழ்வில் மிகப் பெரிய வெற்றியை அடைந்து கொண்டார்" என சொல்லிக் கொண்டிருந்தனர். அவரது நண்பரொருவர் அத்தொழிலாளியை நெருங்கி இந்த நாள் உங்களது வாழ்வில் மிக முக்கியமான நாளாக இருக்க வேண்டும் என கூறிய போது அத்தொழிலாளி "அவ்வாறல்ல நான் பன்னிரெண்டு வயது சிறுவனாக இருக்கும் போது தொழில் செய்து பெற்ற ஒரு கிழமைக்கான இரண்டு ஜுனைஹ் நாணயங்களை பெற்றேன். எனது தாய், எனது தந்தை மரணித்ததன் பின்னர் தான் நோயுற்ற நிலையிலும் என்னை வளர்த்தெடுப்பதற்காக உழைத்து வந்தார். எனவே அந்த இரண்டு நாணயங்களையும் எடுத்துக் கொண்டு சென்று எனது தாயிடம் கொடுத்துவிட்டு தாயே இதன் பின்னர் உழைத்து கஷ்டப்படத் தேவையில்லை நானோ எமக்குப் போதுமான அளவு உழைக்க ஆரம்பித்து விட்டேன்" என்றார்.

  இதுவே எனது வாழ்நாளின் மிக முக்கியமான நாளாக அமைந்திருந்தது என தனது நண்பனுக்கு பதில் அளித்தார்.

- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள ஏனைய கதைகளை வாசித்து அவற்றின் கருத்தை விளங்கி அவற்றினை எடுத்துக்கூற வழிப்படுத்துங்கள்.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- அரும்பதங்கள்.

| | | |
|---|---|---|
| கம்பனி | - | شـركة |
| விழா | - | حفـلٌ |
| வெற்றி | - | نجـاحٌ |
| கூலி | - | أجـرٌ |
| பெற்றுக் கொண்டான் | - | تسـلّم |

இணைப்பு : 7.1.1

## يجب ألا أنسى

01.

ذاتَ يومٍ، خرجَ أعرابيٌ مُتَّجهًا إلى مكة للحجِّ، وكانَ لا يملكُ جملاً، فطال به السفرُ، وتعبَ جسمهُ وتمزَّقَ حذاؤه، فسار حافيًا

وألهبت رمالُ الصحراء قدميهِ، فضاقَ صدرُهُ، وسخط من نفسهِ، ونسيَ نِعَمَ ربِّه بكثيرةعليهِ، وأخذ يندبُ حظَّه، إذ حُرمَ من مالٍ يشترى به جملاً يركبُه في سفرهِ الطويل وعندما وصل إلى مكة، كانت نفسُهُ ملآنة بالضيق. وما إن دخل قَربَ الكعبةِ، حتى رأي على بابها رجلاً مبتورَ الساقين، لا يستطيع أن يتحرَّكَ، يسألُ الناسَ إحسانًا. عندئذٍ أفاق الأعرابيٌّ مما هو فيه، ورجعَ إلى عقلهِ وهويقولُ : ربِّي اعفُ عني. لقد نسيتُ وكانَ يجبُ ألا أنسي، أنك أنت الذى خلقتني ورزقتني ومنحتني القوةَ، وأعطيتني السمعَ والبصرَ. اغفر لي يا ربّاه

- எனது நிலையை நான் மறந்து விடக் கூடாது.

நாட்டுப்புற அரபி ஒருவர் ஹஜ் செய்வதற்காக மக்கா நோக்கி புறப்பட்டார். பயணிப்பதற்கான ஒரு ஒட்டகம் அவரிடம் இருக்கவில்லை. அவருடைய பயணமோ நீண்டு அமைந்திருந்தது. இடையில் அவரது பாதணி அறுந்து பயன்படுத்த முடியாமல் போனதால் வெறுங்காலுடன் நடக்க ஆரம்பித்தார். அதனால் அவரது இரு கால்களும் புழுதி படிந்து பெரும் மன நெருக்கடிக்கு ஆளானார். தனது இரட்சகன் தனக்கு அருளிய அருளையெல்லாம் மறந்து பயணம் செய்வதற்கான வாகனம் ஒன்றையாவது விலைக்கு வாங்க பணம் இல்லையே என குறைப்பட்டுக் கொண்டார்.

மக்கா வந்த அவர் க..பா வாசல் அருகில் கால்களை இழந்த ஒரு மனிதரை கண்டு தன்னிலை பற்றி உணர்ந்து நடந்து கொண்டார். இறைவா என்னை மன்னித்துவிடு மறக்க கூடாதவைகளையெல்லாம் மறந்து விட்டேன் நீதான் என்னைப்படைத்து போஷித்து கேள்வி, பார்வை உடல்பலத்தை அளித்தவனே என்னை மன்னித்துவிடு என தனது தவறுக்காக பிரார்த்திக்கலானார்கள்.

02.

السيرة أفضل: كنت ذاهبا الى السوق يوما لأبيع عشرة حمير أمتلكها وركبت حمارًا وسرت... وبعد فترة عددت الحمير لأتأكد أنها عشرة فوجدتها

تسعة ثم نزلت الحمار وأعدت النظر في عدد الحمير فوجدتها عشرة ثم ركبت الحمار ثانية وعددت الحمير فوجدتها تسعة فنزلت من الحمار وعددت فوجدتها عشرة

فقلت لنفسي :أسير وأكسب حمارًا خير من ان أركب وأخسر حمارًا

03.

## الى اين يصل صوتي؟

كنت يوما اؤذن,فما أنا انتهيت من الآذان جريت مسرعًا فقيل لي الى اين ذاهبًا يا جحا؟ فقلت لهم : اريد ان اعرف الى أين يصل صوتي

04.

## قسمة جحا

جاءني بعض الأصحاب فقال لي أحدهم هل تعرف الحساب يا

قاضي القضاة فقلت نعم. لا يغفى علي منه شيئ فقال: كيف تقسِّمُ اربعة دراهم على ثلاث رجال؟ فسكتُّ قليلا وفكرت ثم قلت : لكل رجل منهم درهم, والدرهم الرابع أخذته أنا أجرًا لي على قسمتى

05.

## لن اغير كلمتى

سئلت يوما كم عمرك؟ فقلت اربعون سنة وبعد مضى عشر سنوات

سئلت كم عمرك؟ فقلت اربعون سنة فقالوا: منذ عشر سنين سألناك فقلتَ أربعون سنة والآن تقول كذالك,فأجبتهم : الرجل الحر لا يحيد عن كلامه. فالله واحد والقول واحد ولو سألتموني بعد عشرون سنة فهذا جوابي أيضًا

**தேர்ச்சி 8.0 : அறபுப் பழமொழிகளை கண்டறிந்து அவற்றின் பின்னணியையும் இலக்கிய சுவையையும் எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1 : அறபுப் பழமொழிகளைத் தேடிப் பெற்று அவற்றின் இலக்கிய நயங்களை கண்டறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 10**

**கற்றல் பேறுகள் :**

- பழமொழிகளை நயந்து விளக்குவார்.
- பழமொழிகளில் காண்பிக்கப்படும் இலக்கிய நயத்தை எடுத்துக் காட்டுவார்.
- பழமொழிகளை சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தும் திறனைப் பெறுவார்.
- பழமொழிகளைத் திரட்டி அவற்றுக்குப் பொருத்தமான கதைகளை, நிகழ்வுகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

:
- மாணவர்கள் தாய்மொழியில் அறிந்து வைத்துள்ள சில பழமொழிகளை கேட்டறிந்து அவற்றில் உட்பொருள், பிரயோகம் பற்றி வினவுங்கள்.
- தரம் 10 அறபு இலக்கிய நயம் பாடத்தில் படித்த பழமொழிகள் பற்றி மீள வலியுறுத்துங்கள்.
- பழமொழிகள் أمثال العرب என அழைக்கப்படுகின்றன. அவை மொழியின் செலுமையை வெளிப்படுத்தும் ஓர் இலக்கிய வடிவமாகும்.
- நாம் சாதாரணமாக பயன்படுத்தும் வார்த்தைகள், வாக்கியங்கள் என்பன எமது தேவை பூர்த்தியடையும் போது மறைந்து போகின்றன.
- மொழியில் சிற்சில வாக்கியங்கள் பொருட் செறிவுமிக்கவை. அவை அதே வடிவில் தோன்றிய காலம் முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய வாக்கியங்களாகவே பழமொழிகளும் காணப்படுகின்றன.
- பழமொழிகளை யார் இயற்றினர் என்று சொல்ல முடியாது. அவை மொழிக்குரிய சொத்தாகும். பொருள் செறிவும் சொற்சுருக்கமும் ரசனையும் கொண்டதாக அவை காணப்படுகின்றன.
- பழமொழிகளை பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்தும் போது பேச்சும் எழுத்தும் வலிமை பெறுகின்றன. இரசனையுடையதாக மாறுகின்றன.
- அறபு பழமொழிகளை நேரடியாக மொழிபெயர்ப்பதை விட்டு தாய் மொழியின் மரபுக்கு ஏற்ப மொழி பெயர்க்கும் போதே உட் கருத்தை இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.
- பின்வரும் பழமொழிகளை விளக்கி பாடத்தை வளர்த்துச் செல்லுங்கள்.

  من جد وجد ‘முயற்சித்தவன் பெற்றுக் கொள்வான்’’ என்பது இதன் நேரடிக் கருத்து. தமிழ் மரபுக்கு ஏற்ப மொழிபெயர்த்தால் ‘‘அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’’ என அமையும். பழமொழியின் உட்கருத்து விடாமுயற்சியையே குறிக்கும்.

مَـنْ يَـزْرَعْ الشَّـوْكَ لا يحصُـدْ بِـهِ الْعنَـبَ

''முல்லை விதைத்தவன் அதிலிருந்து திராட்சை அருவடை செய்ய மாட்டான்'' என்பது நேரடி கருத்தாகும். ஆயினும் தமிழ் மரபில் இதனை '' தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' எனலாம்.

இதன் உட்கருத்து கேடு நினைத்தவன், அதனை அனுபவிப்பான் என்பதாகும்.

- இந்த பழமொழிகளில் காணப்படும் ஒத்திசைவான ஓசை நயம் எழிய சொல்லாட்சி கருத்தாழம், சொற் சுருக்கம் பற்றி விளக்கமளியுங்கள்.
- வாக்கியங்களில் பழமொழிகளைப் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடி விளக்கமளியுங்கள்.
- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்துக்களை இலக்கிய இரசனையோடு விளக்கி இலக்கிய நயத்தையும் எடுத்துக் காட்டுங்கள்.
- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- அரும்பதங்கள்

يحصـد, العنـب, الشـوك, يـزرع, وجـد, جَـدَّ

- **இணைப்பு 8.1.1**

01.அறபு : إن أخاك من واساك

அறபுக் கருத்து : يضـرب للصـديق المخلـص

தமிழ் மரபு : அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.

02.அறபு : "هدنـة على دخَن"

அறபுக் கருத்து : يضـرب لمـن يصـالح وفـى نيتـه الغـدر

தமிழ் மரபு : அடிநாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்

03.அறபு : "قَبْـلَ الرِّمَـاءِ تُمْـلأُ الكنَـائنُ"

அறபுக் கருத்து : يضـرب للأمـر تؤخـذ الاهبـة لـه قبـل وقوعـه

தமிழ் மரபு : வெள்ளம் வருமுன் அணை கோல வேண்டும்.

04.அறபு : "رُبَّ أكلـةٍ تمنـع أكـلاتٍ"

அறபுக் கருத்து : ஒரு சாப்பாடு பல சாப்பாடுகளைத் தடுத்துவிடும்

தமிழ் மரபு : அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

**தேர்ச்சி 9.0 : அறபுத் தமிழ் இலக்கியம் பற்றி விளங்கி ஏனையோருக்கும் எடுத்தக் கூறுவார்**

**தேர்ச்சி மட்டம் 9.1 : அறபுத்தமிழ் இலக்கிய வடிவங்களை இனங்கண்டு அவற்றின் வடிவங்களை ஏனைய மொழி இலக்கிய வடிவங்களோடு ஒப்புநோக்கி விளக்குவார்.**

**பாடவேளை : 05**

**கற்றல் பேறுகள் :**

- அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களை வகுத்துக்காட்டி விளக்கமளிப்பார்.
- அறபு நூல்களைப் போன்றே அறபுத் தமிழ் நூல்களையும் வாசித்து வருவார்
- அறபுத் தமிழ் மொழிப் பயன்பாட்டின் வீழ்ச்சிக்கான காரணங்களையும் மீளுயிர்ப்புக்கான வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** : • பின்வரும் அறபுத்தமிழ் இலக்கிய இறை வாழ்த்துக் கவிதைகளை வாசித்து இலக்கிய வடிவங்களின் போக்கை இனங்காண முயலுங்கள்.

அ) கண்ணின்றி காண்பவனை காதின்றிக் கேட்பவனை
எண்ணில் அடங்கானை எப்போதும் யான் புகழ்வேன்
ஏமு கடலும் ஏழுவானமும் **அர்சும்**
வாழ்வுடையோர் வாஸ்பெழுத மாட்டாது மை **வறகால்**

- றஸுல் மாலை

ஆ) ஆதி இன்மை கொண்ட இப்திதாஉ
அங்கீகார **மீஸான்** மாலையை
ஓதிப் புகழ்ந்து நன்னபி மீதில்
உரைத்தேன் ஸலவாத்தும் தஸ்பீஹும்
சோதி நபி கிளையார் மீதிலும்
துய்ய அஸ்ஹாபிமார் மீதுமே
பேதணுகாத தீனோர்களுமே
பெரியோன் ரிழ்வாணுண்டாக ஆமீன் - மீஸான் மாலை

இ) கண்ணுமின்றி செவியுமின்றி
நலவாயுமின்றி மூக்குமின்றிப்
பெண்ணுமின்றி யாணுமின்றி
யொரு பேச்சுமின்றி மூச்சுமின்றி

ஊணுமின்றி யுறக்கமுமின்றி
நலவுயிர்க் குயிரா யிருப்பவனே
காணவொண்ணா முதலவனே
யாவும் காத்தருளும் றஹ்மானே - நூறு மசாலா

ஈ) பூவா ருலகம் புனைக்கும்
வல்லோனைப் புகழ்ந்து நின்று
மாவாருயர் ஸலவாத்தால்
முகம்மதை வாழ்த்திய பின்
நாவா ருசித் முனாஜாத்து
மாலிகை நன்கியம்பம்
பாவா ரரும்பதம் தேராத
நெஞ்சம் பதைக்கின்றதே

-முனாஜாத் மாலிகை (முஹம்மது ஆலிம் புலவர்)

**பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்**

- அறபுத் தமிழ் இலக்கிய வடிவங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
    - உரைநடை வடிவிலானவை
    - கவிதை வடிவிலானவை

- உரை நடை வடிவிலான இலக்கியங்களில் பின்வருவன அடங்கும்
    - சீவிய சரித்திரம்

      உ-ம் : கதீஜா நாயகி சீவிய சரித்திரம்
      நாலிமாம் சரிதை
      தமீம் அன்ஸாரி கிஸ்ஸா

    - குத்பாக்கள்

      உ-ம் : குத்பாத் இப்னு நபாதா (அறபுத்தமிழில் ஆலிமுல் அரூஸ்)

    - தப்ஸீர்கள்

      உ-ம் : பத்ஹுர் ரஹ்மான் - செய்து முஸ்தபா ஹி 1304
      புதுஹாதுர் ரஹ்மானிய்யா - ஹபீப் முஹம்மத் ஆலிம்

ஹி 1296

- சட்ட நூல்கள்

  உ-ம் : பத்ஹுத் தையான் - ஆலிமுல் அரூஸ்
  அஹ்காமுல் முஸ்லிமீன்

- மெய்ஞ்ஞான நூல்கள்

  உ-ம் : ஷம்ஸுல் ம.்.ரிபா - அப்துல் காதிர் ஸாஹிப்
  கனீமதுஸ் ஸாலிகீன் - ஆலிமுல் அரூஸ்

- நாவல்

  உ-ம் : மதீனது நுஹாஸ் - மாப்பிள்ளை ஆலிம்

- கவிதை நடையிலான இலக்கியங்களில் பின்வருவன அடங்கும்.

  - மஸாலா

    உ-ம் : நூறு மஸாலா, ஆயிரம் மஸாலா, வெள்ளாட்டி மஸாலா

  - நாமா

    உ-ம் : நூறு நாமா, இர்ஸத் நாமா, நஸீஹத்து நாமா

  - முனாஜாத்

    உ-ம் : அல்லாஹ் முனாஜாத், காரண முனாஜாத், ஹக்கு பேரில் முனாஜாத்

  - படைப்போர்

    உ-ம் : இரசூல் படைப்போர், தாகிப்படைப்போர், சக்கூன் படைப்போர்

  - மாலை

    உ-ம் : மீஸான் மாலை, றசூல் மாலை, முதுமொழி மாலை

- மஸாலா என்பது கேள்வி என்ற பொருளைக் கொண்டது. அவற்றில் புதிர் வடிவிலான கேள்விகளும், அவற்றுக்கான பதில்களும் உண்டு.
- நாமா என்பது கதை, புத்தகம், வரலாறு என்ற கருத்துடையது. நாமே என்ற பாரசீகச் சொல் மருவி தமிழில் நாமா எனப்படுகிறது.
- முனாஜாத் என்பது அல்லாஹ்விடம் இரந்து பாடுவதைக் குறிக்கும்.
- படைப்போர் என்பது போர் பற்றிய பிரபந்தங்களைக் குறிக்கும்.

- மாலை என்பது ஒரு வகைப் பிரபந்தத்தைக் குறிக்கும். பாக்கள் மாலை போல் கோர்க்கப்பட்டிருக்கும்.
- கற்றல்பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- அறபுத் தமிழ் இலக்கியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

  உ-ம்

  - அறபுத் தமிழ் நூல்கள் பற்றிய தப்பபிப்பிராயம்
  - அறபுத் தமிழ் நூல்கள் வெளியிடப்படாமை
  - அறபுத் தமிழ் நூல்கள் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டமை.
  - முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் படிப்பதில் ஆர்வம் காட்டியமை
  - அறபுத் தமிழறிவு குன்றியமை - புழக்கத்திலிருந்து விடுபட்டமை.
  - தமிழ் அச்சுப் பொறிகள் வளர்ந்தமை
  - தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள் பெருகியமை
  - அறபு மொழியறிவு பெற வாய்ப்புக்கள் கிடைத்தமை.

- மீளுயிர்ப்புக்காக செய்ய வேண்டியவை பற்றிக் கருத்துப் பரிமாறுக.

  உ-ம்

  - அறபுத் தமிழ் கற்பதற்கு ஊக்குவித்தல்
  - அறபுத் தமிழ் நூல்களின் சிறப்புக்களை எடுத்துக்காட்டல்
  - அறபுத் தமிழ் நூல்களின் இலக்கியச் சுவையை வெளிப்படுத்தல்
  - அவை பற்றிய தப்பபிப்பிராயங்களையும், தவறுகளையும் களைதல்
  - அறபுத் தமிழ் எழுத்து மரபை கணினி மயப்படுத்தல்
  - அறபுத் தமிழ் இலக்கிய மன்றங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை உருவாக்குதல்
  - மக்தபுகளிலும் மத்ரஸாக்களிலும் அறபுத் தமிழை ஒரு பாடமாக இணைத்தல்.

உசாத்துணை : அதபுல் இஸ்லாம் - அஹ்தியா (தர்மச்சாரிய)

இஸ்லாமும் இன்பத்தமிழும் - பேராசிரியர் எம்.எம். உவைஸ்

இஸ்லாமிய இலக்கியம் - அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். இத்ரீஸ்